# பாட்டாளி சிந்தனை

Volume 27 No. 6

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

February 2017

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


பொருளடக்கம்


- நவம்பர் புரட்சி குறித்து லெனின் பக்கம் 1
- இளம் பெண்கள் மீது தாக்குதல் பக்கம் 5
- வாடிவாசலில் துவங்கிய ஜல்லிக்கட்டு... பக்கம் 1
- எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் அறிக்கைகள் பக்கம் 7, 8


# நவம்பர் புரட்சி குறித்து – லெனின்

*(மாபெரும் அக்டோபர் புரட்சியின் நான்காவது ஆண்டு நிறைவு தினம், அக்டோபர் 14, 1921 அன்று லெனின் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி)*

...இரஷ்யாவில் புரட்சியின் நேரடியான மற்றும் உடனடியான நோக்கமானது, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியாகவே இருந்தது. அதாவது, மிச்சமிருக்கின்ற மத்திய காலகட்ட பழக்கவழக்கங்களை முற்றிலுமாக துடைத்தெறிந்து அழித்தொழிக்க வேண்டும் என்கின்ற, இக்காட்டுமிராண்டித்தனத்திலிருந்து, இந்த அவமானத்திலிருந்து இரஷ்யாவை அப்புறப்படுத்த வேண்டும் என்கின்ற, நமது நாட்டின் அனைத்து கலாச்சார மற்றும் முன்னேற்றத்திற்கு பெருந்தடையாயிருக்கின்றவைகளை அகற்றிட வேண்டும் என்கின்ற நோக்கங்களாகவே இருந்தன ...முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கம் என்பதன் பொருள், நாட்டில் நிலவுகின்ற சமூக உறவுகள் (அமைப்புகள், நிறுவனங்கள்) மத்தியக் கால பழக்கவழக்கங்கள், பண்ணையடிமை முறை, நிலப்பிரபுத்துவம் ஆகியன அகற்றப்பட வேண்டும் என்பதாகும்... மதம் அல்லது பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவதையும் அல்லது இரஷ்யர் அல்லாத தேசிய இனங்கள் ஒடுக்கப்படுவதையும் சரிசமமாக நடத்தப்படாததையும் எடுத்துக்கொள்ளுங்கள். இவைகளெல்லாம் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் பிரச்சினைகளாகும். இவைகளைப் பற்றி வக்கிரப் புத்தியுள்ள குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் எட்டு மாதங்களாகப் பேசிக்கொண்டிருந்தனர். (அன்று மென்ஷ்விக் கட்சியும் சோசலிசப் புரட்சியாளர்கள் கட்சியும் ஆட்சியதிகாரத்தில் இருந்த காலம் – ஆசிரியர்) உலகின் மிகவும் முன்னேறிய நாடுகளில் ஒன்றில்கூட, இத்தகைய பிரச்சினைகள் முதலாளித்துவ ஜனநாயக வழியில் முழுவதுமாக தீர்த்துவைக்கப்படவில்லை. நமது நாட்டில், அவை யாவும் அக்டோபர் புரட்சியினால் சட்டபூர்வமாக முழுவதும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கின்றது. மதத்தை எதிர்த்து நாம் முனைப்புடன் போராடினோம், போராடிக்கொண்டிருக்கின்றோம். அனைத்து இரஷ்யா அல்லாத தேசிய இனங்களுக்கும் நாம் அவர்களின் சொந்த குடியரசுகளையும் தன்னாட்சி கொண்ட பிராந்தியங்களையும் வழங்கியிருக்கின்றோம். விதிவிலக்கின்றி உலகின் அனைத்து நாடுகளிலும் பேராசை பிடித்த பூர்ஷ்வாக்கள் மந்தபுத்திகொண்ட பயந்துபோயிருக்கும் குட்டி பூர்ஷ்வாக்கள் புதுப்பித்துக்கொண்டிருக்கும் நிலப்பிரபுத்துவ மத்தியக்காலகட்டத்தின் வெறுக்கத்தக்க மிச்சசொச்சங்களாக இருக்கின்ற கீழ்த்தரமான, அற்பத்தனமான, இழிவான, பெண்ணின உரிமைகள் மறுப்பையும் பாலின சமத்துவமின்மையையும் இரஷ்யாவில் நாம் இப்போது காண முடியாது.

இவைகள் யாவும் முதலாளித்துவ ஜனநாயக புரட்சியின் உள்ளடக்கத்தை உருவாக்குகின்றது. நூற்றைம்பது மற்றும் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர், அப்புரட்சிகளின் முற்போக்குத் தலைவர்கள் என்பவர்கள் மத்திய காலகட்ட சலுகைகளிலிருந்தும், பாலின சமத்துவமின்மையிலிருந்தும், ஒரு மதம் அல்லது மற்றொரு மதம் அரசிடம் சலுகைகள் பெறுவதிலிருந்தும் தேசிய சமத்துவமின்மையிலிருந்தும் மனித இனத்தை விலக்கி வைத்திட உறுதியளித்தனர். அவர்கள் உறுதியளித்தனர், ஆனால் அந்த உறுதிமொழியை அவர்கள் நிறைவேற்றவில்லை. “தனிச்சொத்தின் புனிதமான



உரிமை” மீது அவர்கள் வைத்திருந்த “மரியாதை” அவர்களை தடுத்ததினால் அவர்களால் அதை நிறைவேற்றிட முடியவில்லை. நமது பாட்டாளி வர்க்கப் புரட்சியானது, இந்த சபிக்கப்பட்ட “மரியாதை”, இந்த மும்முறை சபிக்கப்பட்ட மத்திய கால நடைமுறைகள் மற்றும் “தனிச்சொத்தின் மீதான புனிதமான உரிமை” ஆகியவற்றால் பீடிக்கப்பட்டிருக்க வில்லை...

எவ்வாறு ஒரு புரட்சியானது மற்றொரு புரட்சிக்கு இட்டுச்செல்கின்றது என்பதற்கான மிகவும் தெள்ளத் தெளிவான உதாரணங்கள் அல்லது வெளிப்பாடுகளில் ஒன்றானது சோவியத் அமைப்புமுறை மட்டுமேயாகும். சோவியத் அமைப்புமுறையானது,

தொடர்ச்சி 7ம் பக்கம்

# வாடிவாசலில் துவங்கிய மக்களின் கோபக் குமுறலின் அடையாளமாக வெடித்தெழுந்த ஜல்லிக்கட்டு போராட்டம்

சென்ற ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகையைத் தொடர்ந்து தமிழகமெங்கிலும் ஜல்லிக்கட்டு வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றது. ஜல்லிக்கட்டு விளையாட்டு வேண்டும், பீட்டாவை எதிர்ப்போம், என்ற கோரிக்கையுடன் துவங்கிய போராட்டத்தின் மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வைத்தேடி மக்கள் மனதில் உறைபனியாயிருந்த ஏக்கம், ‘ஜல்லிக்கட்டு’ என்ற போராட்ட அடையாளம் பெற்று உருகிப் பெரும்பிரவாகமாகப் பாய்ந்தது. மாணவர் இளைஞர்களின் போராட்ட அதிர்வுப் பரப்புக்குள் மொத்தத் தமிழ்நாடும் வந்தது. சமூக ஊடகங்களில் காட்டுத்தீயென பரவிய இந்த போராட்டம் எல்லை தாண்டி வெளிநாடுவாழ் தமிழர்களையும் பீடித்தது. ஒடுக்குமுறை மற்றும் அதிகார நடவடிக்கைகளினால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த மனித உணர்ச்சிகளின் ஊற்று, பெரும்பிரவாகமாக மாறத்துவங்கியது. தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட அனைத்து கட்சிகளாலும் ஊடகங்களாலும் நீதித்துறையினராலும், ஏன், சில காவல்துறை ஊழியர்களாலும் கூட இப்போராட்டம் வரவேற்கப்பட்டது. ஆனால் ஜனவரி 22 வரை மத்திய, மாநில ஆளும் கட்சியினரால் போற்றிப் புகழ்பாடப்பட்ட மாணவர்களும் இளைஞர்களும் திடீரென ஜனவரி 23ஆம் தேதி ஆளுவோரின் கண்களுக்கு சமூக விரோதிகளாக, தேச விரோத சக்திகளாகத் தெரிந்தனர். அவர்கள் காவல்துறையின் கடும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

ஆழிப் பேரலை போன்று உயர்ந்தெழுந்துவந்த ஜல்லிக்கட்டு போராட்ட அலை தற்போது அடங்கி விட்டது. ஆனால் இப்போராட்டம் தமிழகத்தின் அனைத்துப் பகுதி மக்களையும் ஈர்த்து பெரும் எழுச்சியாக எழுந்ததெப்படி, அமைதி வழியில் மக்கள் பங்கேற்ற இப் போராட்டத்தினர் மீது, ஆதரித்த அரசாங்கமே

தொடர்ச்சி 2ம் பக்கம்

## ஜல்லிக்கட்டுக்காக போராடியவர்கள் மீது நடத்திய தாக்குதலை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி ஜனவரி 23, 2017லில் வெளியிட்ட அறிக்கை:*

ஜல்லிக்கட்டு கோரிக்கை சம்மந்தமாக தமிழ்நாடு முழுவதும் ஒரு வார காலமாக அமைதியாக போராடிய மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், பெரியோர்கள் மற்றும் குழந்தைகள் பயத்தால் அலறும் படியாகவும் கருணையற்ற முறையில் குரூரான முறையில் அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றியும், தடியடி, கல்வீச்சு, கண்ணீர்ப் புகை வீசியக் காட்டுமிராண்டித்தனமான காவல்துறையின் செயல்களை வன்மையாக கண்டிக்கிறோம். தமிழ்நாடு அரசாங்கத்தையும் காவல்துறையின் இச்செயல்களையும் வன்மையாக கண்டிக்கிறோம். கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறோம். தாக்குதலுக்குள்ளான இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் பூரண நலம்பெறும் வரையில் உரிய மருத்துவ சிகிச்சையை முற்றிலும் இலவசமாக வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

# அரசாங்கங்களால் ஆதரிக்கப்படும் எந்தப் போராட்டமும் இறுதியில் அரசாங்கங்களாலேயே ஒடுக்கப்படும் என்பதை ஜல்லிக்கட்டு போராட்டம் நிரூபித்துள்ளது

1ம் பக்கத் தொடர்ச்சி

பின்பு வன்மத்தை காட்டியதன் காரணமென்ன, ஜல்லிக்கட்டு விளையாட்டை நாம் எப்படி பார்ப்பது, அக்கோரிக்கையை அரசாங்கம் எப்படிக் கையாள வேண்டும், ஒரு சமூகத்தின் பேணிக் காக்கவேண்டிய பாரம்பரியங்கள் எவை, தலைமையும் அரசியலும் இல்லாததால் ஏற்பட்ட விளைவுகள் என்ன, இனி மாணவர்களும் இளைஞர்களும் இதிலிருந்து கற்றுக்கொண்டு முன்செல்வதெப்படி போன்ற கேள்விகள் நம்முன் நிற்கின்றன.

## போராட்டம் தோன்றியதன் பின்னணி

ஆண்டாண்டுதோறும் பொங்கல் பண்டிகையின் போது ஜல்லிக்கட்டு என்ற காளையை அடக்கும் அல்லது ஏறுதழுவும் போட்டிகள் மதுரை, தேனி, திருச்சி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் நடப்பது வழக்கம். காலப்போக்கில் விவசாயமும் விவசாயிகள் வாழ்நிலையும் தேய்ந்து வருவதால் இந்த ஊரக விளையாட்டு நடைபெறும் ஊர்களும் சுமார் பதினைந்தாக சுருங்கிவிட்டது. இவ்விளையாட்டில் இருக்கும் ஆபத்துகளையும் காளையை தூண்டிவிட சிலர் செய்யும் அத்துமீறல்களையும் கவனத்தில் கொண்டு மாநில அரசாங்கம் 'தமிழ்நாடு ஜல்லிக்கட்டு ஒழுங்குமுறை சட்டம் 2009'ஐ இயற்றியது. ஆனால் காளைகளை காட்சிப் பொருளாகப் பயன்படுத்தும் விலங்குகள் பட்டியலில் இருப்பதாகக் கூறி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் ஜல்லிக்கட்டிற்கு 2011ல் தடைவிதித்தது. ஆயினும் மாநில ஒழுங்குமுறை சட்டத்தின் படி ஜல்லிக்கட்டு நடந்துகொண்டிருந்தது. தமிழ்நாடு சட்டம் 2009ஐ செல்லாது, அது விலங்குகள் வதை தடைச் சட்டம் 1960க்கு எதிரானது எனக்கூறி 2014லில் ஜல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்றம் நிரந்தர தடைவித்தித்தது.

இதற்கு ஜல்லிக்கட்டு நடக்கும் ஊர்களில் எதிர்ப்புகள் இருந்தபோதிலும் அவ்வெதிர்ப்பு மாநிலம் தழுவிய பெரிய போராட்டமாக மாறவில்லை. பெரிய திராவிடக் கட்சிகள் தமிழர்களைக் கைவிட்டுவிட்டன, நாங்கள்தான் உண்மையில் தமிழர்களின் உரிமைக்காகப் பாடுபடுகிறோம் என நிரூபித்துக்கொள்ள வழக்கமாக அவ்வப்போது சில மொழியுணர்வு, இனவுணர்வுப் பிரச்சினைகளைப் பேசும் சில சிறிய, தமிழ் தேசிய உணர்வைப் பயன்படுத்தும் கட்சிகளும் இயக்கங்களும் ஜல்லிக்கட்டு கோரிக்கையை தீவிரமாக கையில் எடுத்துக்கொண்டிருந்தன. திமுக, அதிமுக போன்றவையும் அவ்வப்போது உதட்டளவில் இதற்காக குரல்கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டன. அப்பொழுது, ஏப்ரல் மாதம் நடக்கவிருந்த 16வது பாராளுமன்றத் தேர்தல் மக்களின் கவனத்தை ஈர்த்திருந்தது.

ஆனால் 2016 மே மாதம் சட்டசபைத் தேர்தல் வருவதைக் கருத்தில் கொண்டு ஜல்லிக்கட்டு விளையாட்டிற்கு தடையை நீக்கக்கோரி 2015 டிசம்பர் இறுதியில் அலங்காநல்லூரில் ஸ்டாலின் உண்ணாவிரதப் போராட்டம் அறிவித்தார். அதிமுகவினரும் பாலமேட்டில் காளைகளைக் கொண்டு யாகம்வளர்த்து கோ பூஜை செய்து 'தமிழர்களுக்கான' தங்கள் உணர்வை வெளிப்படுத்தினர். மற்ற கட்சிகளும் போட்டிப்போட்டு பல போராட்டங்களை அறிவித்தன. மத்தியில் ஆட்சிக்கு வந்துவிட்ட பாஜகவும், தமிழகத்தில் வேரூன்ற வாய்ப்பிருப்பதைக்கண்டு 'தமது அரசாங்கம் ஜல்லிக்கட்டு தடையை நீக்கும்' என்று வாக்கு கொடுத்தனர். ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில், 'தமிழர்களின் வீர விளையாட்டு' என்ற உணர்வைப் பயன்படுத்தி மாநிலமுழுதும் போராட்டத்தை நடத்தி தமக்கான அரசியல் அறுவடையை சாகுபடி செய்துகொள்ள முடியும் என்ற வாய்ப்பு இருப்பதை அனைத்து அரசியல் கட்சிகளும் அறிந்துகொண்டன. அச்சமயம் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களும் சென்னையும் வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தன. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இலட்சக்கணக்கானோர் வீடுகளையும் உடைமைகளையும் இழந்து தவித்தனர். மக்களின் கவனத்தை இந்த பேரழிவு பிரச்சினை இழுத்துக் கொண்டிருந்தது.

2016 ஜனவரி 8ஆம் தேதி காட்சிப்படுத்தப்படும் விலங்குகள் பட்டியலிலிருந்து காளையை நீக்கி மத்திய அரசு அறிவிப்பாணை வெளியிட்டதால் ஜல்லிக்கட்டை நடத்தும் வாய்ப்பு இருந்தது. அதனால் போராட்டங்கள் எழவில்லை. ஆனால் சில நாட்களிலேயே, ஜனவரி 14 அன்று, இந்திய விலங்குகள் நல வாரியமும் பீட்டா (People for Ethical Treatment of Animal) என்ற சர்வதேச தன்னார்வ அமைப்பும் வழக்கு தொடுத்ததன் பேரில் ஜல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்றம் தான் முன்பு 2014ல் விதித்த தடையை உறுதிசெய்தது. ஜல்லிக்கட்டு கோரிக்கை மீண்டும் வலுப்பெறத் துவங்கியது.

அதேசமயம், 2016 டிசம்பர் 5ஆம் நாள் நள்ளிரவில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா காலமானார். தனது தலைவரை இழந்ததால் அதிமுக கட்சியிலும் தமிழக அரசியலிலும் ஒரு வெற்றிடம் உருவானது. கட்சியின் தலைமையை யார் கைப்பற்றுவது என்ற உட்கட்சிக் குழப்பங்களும் சூழ்நிலையைத் தனக்கு சாதகமாக்கிக் கொள்ள மத்திய பாஜகவின் முயற்சியும் வெளிப்படத்துவங்குவதை செய்திகள் புலப்படுத்தத் துவங்கின. உணவு பாதுகாப்பு மசோதா, சரக்கு மற்றும் சேவை வரி (GST) மசோதா ஆகியவை அதிமுகவின் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் நிறைவேறியதும் கவனிக்கத்தக்கதாகும். அதிமுக தலைமையில் ஏற்பட்ட வெற்றிடம் தோற்றுவித்த சூழலைச் சாதகமாக்கிக் கொள்ள திமுகவும் வழிதேடிக் கொண்டிருந்தது. திரு ஸ்டாலின் செயல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றே அவர் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்கான போராட்டத்தை துவங்கிவிட்டார். சட்டச் சிக்கல்களை சரிகட்டி ஜல்லிக்கட்டை நடத்த அனுமதிவழங்கும் வாய்ப்பு இருப்பதால் இந்த பொங்கல் திருநாளில் ஜல்லிக்கட்டு நடக்கும் என்று உறுதியளித்து மத்தியில் ஆளும் பாஜகவின் மாநிலத் தலைவர்களும் தமிழகத்தில் காலூன்ற வாய்ப்பைக் கண்டனர். தமிழக முதல்வர் திரு பன்னீர்செல்வம், அதிமுகவின் தலைவராக தான்தான் மக்களின் விருப்பத்தேர்வு என்பதை நிரூபிக்க வாய்ப்பைத் தேடிக்கொண்டிருந்தார். ஜல்லிக்கட்டுக்கு அனுமதி பெற்று நற்பெயரெடுப்பதில் தனக்கும் ஒரு வாய்ப்பிருப்பதை அவர் கண்டார்.

## நியாயமான போராட்டங்களிலிருந்து மக்களைத் திசைதிருப்ப ஜல்லிக்கட்டு போராட்டம் ஆட்சியாளர்களுக்குத் தேவைப்பட்டது

முதலாளித்துவ கட்சிகளின் நோக்கம் இவ்வாறிருக்க, மக்களோ, கடும் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தனர். ரூ500, 1000 நோட்டுக்கள் செல்லாது என்ற பாஜக அரசாங்கத்தின் பணமதிப்பு நீக்கக் கொள்கையால் பொதுமக்களும் சிறு தொழில் மற்றும் நடுத்தர வணிகர்களும் அவற்றை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் இலட்சக்கணக்கான மக்களும் பெரும் அவதிக்குள்ளாயினர். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில்லை. தொழிற்கல்வி, உயர்கல்வி பெற்ற இளைஞர்கள் மட்டுமின்றி பள்ளிக்கல்வியை முடிக்காத குடிசைப்பகுதி, கிராமத்து மக்களின் வாழ்வாதாரங்களும் கொடூரமாக அழிக்கப்பட்டு வந்தன. மாணவர்கள் கல்விக் கட்டண உயர்வுகளாலும் நீட் (National Eligibilty Entrence Test -NEET) போன்ற தேர்வுகளாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். வறட்சியினால் ஏராளமான விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டிருக்கின்றனர். பொங்கல், உழவர் திருநாளா உழவன் வீட்டில் இழவுத் திருநாளா என்ற கோஷம் சுவரொட்டிகளில் எங்கும் பரவத் துவங்கியது. விவசாயிகளின் போராட்டங்கள் தன்னெழுச்சியாக வெடிக்கத்துவங்கின. பாஜகவின் பணமதிப்பு நீக்கத்தை எதிர்த்து நாடெங்கிலுமல்லாது தமிழ்நாட்டிலும் போராட்டங்கள் கிளம்பின. எனவே மக்களின் நியாயமான போராட்டத்தை திசைதிருப்பும் தேவையும் மத்திய, மாநில ஆளும் வர்க்கங்களுக்கு அவசியமானது.

## போராட்டத்திற்கான களத்தை அமைத்துக் கொடுத்ததில் அரசாங்கமே பெரும் பங்கு வகித்தது

தாங்கள்தான் தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகள் என காட்டிக்கொள்ளத் துடிக்கும் அரசியல் தலைவர்களின் தேவையும் மக்களைத் திசை திருப்பும் ஆளும் வர்க்கத்தின் நோக்கமும் சேர்ந்து கொள்ள, இதுவரை ஜல்லிக்கட்டு நடக்கும் ஊர்களைச் சுற்றி மட்டுமே நடந்துகொண்டிருந்த இளைஞர்களின் போராட்டம் தமிழகமெங்கும் பரவவேண்டிய தேவையாக மாறியது. நேற்றுவரை ஊழல் சுரண்டல் என மக்கள் விரோத ஆட்சியை நடத்திக் கொண்டிருந்த அரசியல் தலைவர்களுக்கு திடீரென்று தமிழர்களின் பாரம்பரியமும் பண்பாடும் நினைவிற்கு வந்துவிட்டன. இக்கட்சிகளின் மற்றும் முதலாளித்துவவாதிகளின் பிரச்சார கருவிகளான காணொளி ஊடகங்கள் நொடிதோறும் போராட்டக் காட்சிகளை காண்பித்து மக்களை உசுப்பிக்கொண்டிருந்தன. சில வாரங்களுக்கு முன்னர் பணமதிப்பு நீக்கக் கொள்கையை எதிர்த்து போராடிய சிபிஐ(எம்)மின் இளைஞர் மற்றும் பெண்கள் சங்கத்தினரை மண்டையை உடைத்து, பெண்களின் அங்கங்களின் மீது கை வைத்து கண்மூடித்தனமாகத் தாக்கிய காவல்துறை, தற்போது மக்களின் நண்பனாக காட்டிக்கொண்டது. கல்லூரி விடுதிகளிலிருந்து மாணவர்களை வெளியேற்றியும் விடுமுறையளித்தும் மாநில அரசாங்கம் பல வழிகளில் மக்கள் திரள உதவியதை செய்திகளில் காணமுடிந்தது. கட்டணக் கொள்ளையடிக்கும் தனியார் பொறியியல் கல்லூரிகளும் மாணவர்களுக்கு மேடை அமைத்துக்கொடுத்தன. பன்னாட்டு ஐடி கம்பெனிகள் தங்கள் ஊழியர்களை வேலை நேரத்திலேயே போராட்டத்தில் பங்குகொள்ள அனுமதித்தன.

தங்களின் அரசியல் சமூக–பொருளாதார நடவடிக்கைகளை எதிர்த்து நடைபெறும் போராட்டம் அல்ல இது என்பதை மத்திய–மாநில அரசாங்கங்கள் புரிந்துகொண்டன. ஜல்லிக்கட்டு கோரிக்கையை நிறைவேற்றினாலும்கூட தங்களின் வர்க்கநலன்கள் எதுவும் பாதிக்கப்படப் போவதில்லை என்பதை ஆளும்வர்க்கமும் புரிந்து கொண்டது. சுருங்கக்கூறின் அரசாங்கமே போராட்டத்திற்கான மேடையை அமைத்துக்கொடுத்ததில் பெரும் பங்காற்றியது.

தன்னெழுச்சியாக நடந்தாகக் கருதப்படும் இப்போராட்டம் உண்மையில் பல்வேறு தமிழ் உணர்வு அமைப்புகளாலும், என்ஜிவோக்களாலும் (NGO) போராட்டக்காரர்களின் குரலை ஒலிப்பவர்களாக சில தனிநபர்களைக் காட்டிக் கொண்டிருந்த ஊடகங்களாலும் பிரதானமாக வழிநடத்தப்பட்டன. சென்ற முறை சென்னை பெருவெள்ளத்தின்போது மக்களைக் காப்பாற்ற உருவான சில மாணவர் இளைஞர் அமைப்புகளும் ஐடி துறை ஊழியர்களைக் கொண்டிருக்கக்கூடிய தன்னார்வ தொண்டு அமைப்புகளும் போராட்டத்திற்கு ஆதரவாக சமூக ஊடகத்தின்மூலம் இளைஞர்களை வெகுவாகத் திரட்டின.

ஜல்லிக்கட்டு அரசியலில் யார் மக்களுக்காக அதிகமாக போராடுகின்றனர் என்பதை நிரூபிக்க பிரதான கட்சிகள் போட்டாபோட்டியில் இருந்தன. இக்கட்சிகளல்ல, தாங்கள் தான் தமிழக மக்களின் உண்மையான பிரதிநிதிகள் எனக் காட்டிக்கொள்ள தமிழ் உணர்வை அடிப்படையாகக் கொண்ட சில அமைப்புகளும் இப்போராட்டத்தில் அறுவடை செய்துகொண்டன. திட்டமிட்டபடி கடைசிவரை இழுத்தடித்து ஜல்லிக்கட்டை நடத்த அனுமதியளிக்கும் அவசர சட்டத்தை தமிழக அரசாங்கம் நிறைவேற்றியது. மக்கள் இதை தங்கள் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகக் கருதினர்.

## போராடினால் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை உடைத்து நொறுக்க ஆளும் வர்க்கம் மக்கள்மீது கொடூரமான தாக்குதலை ஏவியது

தங்கள் போராட்டத்தின் அழுத்தத்தால் அரசாங்கம் பணிந்து கோரிக்கையை நிறைவேற்றியதாக எண்ணிக்கொண்டு சென்னை கடற்கரை உட்பட பல போராட்டக் களங்களிலிருந்தும் மக்கள் கலையத் துவங்கினர். மக்களின் வெற்றிக் களிப்பு ஆளுவோருக்கு எச்சரிக்கை மணியை அடித்தது. இது தனக்கு ஆபத்து என அரசாங்கம் உணர்ந்தது. இனி இதேபோல், வாழ்வாதாரப் பிரச்சினைகளை வைத்து மக்கள் போராடத் துவங்கிவிட்டால்!

தொடர்ச்சி 3ம் பக்கம்

# ஜல்லிக்கட்டு விளையாட்டு தோன்றிய காலத்தின் விழுமியங்களும் சமூக முன்னேற்றத்திற்கேற்ப விளையாட்டில் தேவைப்படும் மாற்றங்களும்

2ம் பக்கத் தொடர்ச்சி

அதனால்தானோ என்னவோ, போராட்டத்தின் கோரிக்கை மற்றொரு கட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஜல்லிக்கட்டுக்கு தற்காலிக அவசர சட்டத்தை ஏற்கமாட்டோம், நிரந்தரத் தீர்வு வேண்டும் என்று கோரிக்கை சிலரால் முன்வைக்கப்பட்டது. துவக்கத்தில் அலங்கா நல்லூரில் போராட்டத்தை ஆரம்பித்த ஜல்லிக் கட்டு பேரவைத் தலைவர்களும் காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் சிவசேனாபதியும் நிரந்தரத் தீர்வைப் பற்றி பின்னால் பேசலாம் தற்போது கலைந்து செல்லுங்கள் என வேண்டுகோள் விடுத்தும்கூட போராட்டத்தின் ஒரு பகுதியினர் நிரந்தரத் தீர்வு வேண்டும் என்று போராடினர். காவல்துறை யினரின் மென்மையான அணுகுமுறை தற்போது கடுமையாக மாறியது. போராட்டத்தில் சமூக விரோத சக்திகள் நுழைந்துவிட்டதாக திடீரென்று கண்டுபிடிக்கப்பட்டது. அலங்காநல்லூர், மதுரை, கோவை, ஈரோடு ஆகிய நகரங்களில் மிக மோசமான தடியடி நடத்தப்பட்டு கூட்டம் கலைக்கப்பட்டது.

தலைநகர் சென்னையில் காவல்துறையினர் நடத்திய தாக்குதல்கள் இதுவரை மக்கள் பார்த்திராததாகும். ஐஸ் ஹவுஸ் காவல் நிலையம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது, அதன் முன் நின்றிருந்த பொதுமக்களின் வாகனங்களும் கொளுத்தப்பட்டன. ஹிட்லரின் பாசிச ஆட்சியில் ஆளுவோரே ஜெர்மன் நாடாளுமன்ற கட்டிடத்துக்கு தீவைத்து அதன் பழியை கம்யூனிஸ்டுகளின் மீது சுமத்திய வரலாற்றின் ஒரு நகல் எடுப்புதானோ என்ற எண்ணத்தை அது நினைவுபடுத்தியது. காவலர்களே மக்கள் மீது ரௌடிகளைப்போல கற்களை வீசினர். வாகனங்களுக்கும் ஆட்டோக்களுக்கும் குப்பத்துக் குடிசைகளுக்கும் காவலர்கள் தீ வைப்பது தொலைக்காட்சி சானல்களில் தொடர்ந்து காண்பிக்கப்பட்டது. காவல்நிலையம் தீவைக்கப் பட்டதைத் தொடர்ந்து பெண்களையும் மாணவர் களையும் ஓட ஓட விரட்டித்தாக்கினர். வீடுகளில் புகுந்து பொருட்களைச் சேதப்படுத்தினர், குழந்தைகளை மிரட்டி அடித்தனர். ஏராளமான மாணவர்கள்மீது பொய்வழக்குகளைப் போட்டனர். போராட்டத்திற்கு ஆதரவு தந்தனர் எனக் கூறி நடுக்குப்பம் மீனவ மக்கள் மீது வீடுபுகுந்து தாக்கினர். சாலையோர மீன்கடைகளை எரித்தனர். மெரினாவிலிருந்து தள்ளியிருக்கும் வியாசர்பாடி பகுதிகளிலும் காவல்துறை வாகனம் எரிக்கப் பட்டதைச் சுட்டிக்காட்டி மாணவர்கள்மீதும் பொதுமக்கள்மீதும் பலத்த தடியடி நடத்தப்பட்டது. மொத்தத்தில் ஆட்சியாளர்கள் மக்களை அச்சுறுத்தி குலைநடுங்க வைத்தனர். இனி ஒருபோதும் காவல் துறையை மீறி போராட்டத்திற்கு வருவதோ ஆதரவு தருவதோ சாமானிய மக்கள் கனவிலும் நினைத்துவிடக்கூடாது அல்லவா.

காவல்துறையின் காட்டுமிராண்டித் தாக்குதலை ஜனநாயக எண்ணம் கொண்ட அனைவரும் கண்டித்தனர். அவசர சட்டம் நிறைவேற்றியதன் மூலம் தனக்கு நற்பெயர் கிடைத்துவிட்டதாகக் கருதிய திரு பன்னீர்செல்வமும் சமூக விரோதிகளை ஒடுக்கவே காவல்துறை செயல்பட்டதாக கூறினார். போராட்டக்காரர்களின் மத்தியில் தீவிரவாத அமைப்புகளும் தேச விரோத சக்திகளும் ஊடுருவிவிட்டதாகவும் அத்தகைய அமைப்புகளை தான் அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதே காரணத்தைக் கூறி மத்திய பாஜக அரசாங்கமும் தேவைப்பட்டால் மத்திய ரிசர்வ் படையை அனுப்புவதாக மாநில அரசாங்கத்திற்கு கூறியது. 'பிரிவினைவாத சக்திகள்' இருப்பதை அறிந்திருந்த காவல்துறை ஏன் முன்பே அவர்களை போராட்டத்திலிருந்து அகற்றவில்லை என்ற நியாயமான கேள்வியை மக்கள் முன்வைத்தனர். அந்த 'தீவிரவாத' அமைப்புகளில் சில இடதுசாரி மாணவர் சங்கங்களும் தமிழ் உணர்வை அடிப் படையாக கொண்ட இயக்கங்களும் சில இஸ்லாமிய அமைப்புகளும் அடங்கும். இவையெல்லாம் அரசின் அங்கீகாரம் பெற்ற அமைப்புகளாக மக்கள் மத்தியில் போராடிக்கொண்டிருக்கும் அமைப்புகளாகும். அதேசமயம், ஜாதி, மத வேறுபாடின்றி கூடியிருந்த மக்களிடையே பிளவைக் கொண்டுவர, 'இஸ்லாமிய அமைப்பினர் போராட்டக் களத்தில் ஏன் தொழுகை செய்ய வேண்டும், ஜல்லிக்கட்டு பாரம்பரியத்திற்காகப் போராடுபவர்கள் ஏன் பசுவைத் தொழும் பாரம்பரியத்தை மதிக்காமல் மாட்டிறைச்சி உண்கின்றனர்' போன்ற, உண்மையான பிரிவினை சக்தியான இந்துத்துவவாதிகள் செய்த மதவாத பிரச்சாரமும் செயல்பாடுகளும் ஆளுவோரின் கண்களில் படவேயில்லை.

சுருங்கக்கூறின் அன்றாட இயல்பு வாழ்க்கைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் அமைதி வழியில் போராடிய மக்கள் மீது கொடூரமான தாக்குதல் அவிழ்த்துவிடப்பட்டது. இருப்பினும் மாணவர் களும் இளைஞர்களும் பெண்களும் காவல் துறையைக் கண்டித்து பல பகுதிகளில் கடுமையாகப் போராடியது பாராட்டத்தக்கதாகும்.

### ஆளும் வர்க்கத்தின் மக்கள்விரோத கொள்கைகளுக்கு எதிராக அடங்கிக் கிடந்த மக்களின் கோபக் குமுறல் 'ஜல்லிக்கட்டு' என்ற அடையாளம் கொண்டு பீறிட்டெழுந்தது

அதிகாரத்திலிருந்த அனைத்து அரசியல் கட்சி களாலும் கால்நூற்றாண்டுக்கும் மேலாக பின் பற்றப்பட்டுவரும் உலகமய சுரண்டல் நடவடிக்கை களுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டங்கள் எல்லாம் இதுவரை கடுமையாக ஒடுக்கப்பட்டு வந்தன. இக்கொள்கையினால் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி தூக்கிவீசி யெறியப்பட்டனர். இலட்சக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர், இவ்வெண்ணிக்கை மேலும் பெருகுகின்றது. உள்நாட்டு சிறு தொழில்கள் அழிந்து வேலைவாய்ப்பு முற்றிலும் இல்லாத நிலை நிலவுகின்றது. நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினை களால் அழிந்துவரும் விவசாயம், நன்கொடை யாகவும் பல்வேறு கல்விக்கட்டணங்களாகவும் பெருந்தொகையினை வசூலிக்கும் சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் கொடுங்கட்டுப்பாடுகள், மது போதைப் பொருட்களின் ஆதிக்கம், மின்னணு ஊடகங்களில் நிரம்பிவழியும் ஆபாச வக்கிரங்கள், பெண்கள்மீதான தொடர் வன்முறைகள், நிர்வாக மெங்கிலும் புரையோடிப்போன ஊழல் இவையே மக்களின் வாழ்நிலைமைகளாகிவிட்டன. இவற்றுடன், இதற்கெல்லாம் காரணம், மாநில மக்களின் கோரிக்கைக்கு மத்திய அரசாங்கம் செவிசாய்ப்ப தில்லை என்ற பிரச்சாரத்தினால் ஏற்பட்ட ஒடுக்கு முறை உணர்வும் சேர்ந்துகொண்டது.

செல்வி ஜெயலலிதாவின் தலைமையிலான அதிமுக ஆட்சியில் மக்களின் போராட்டம் எதுவும் வந்துவிடாவண்ணம் 'போலீஸ் ராஜ்' என்றழைக்கப் படும் அதிகாரத்துவ அடக்குமுறை ஆட்சி இருந்தது. அவரின் மறைவுக்குப்பின் கட்சித்தலைமையிலும் நிர்வாக அதிகாரமட்டத்திலும் ஏற்பட்ட குழப்ப நிலை, இந்த இருக்கமான சூழ்நிலையை சற்றே தளர்த்தியது. இதனாலும் ஜல்லிக்கட்டு போராட்டத்தில் மாநிலம் முழுவதும் மக்கள் போராட்டத்தில் கலந்துகொள்வது அதிகரித்தது. ஜல்லிக்கட்டைப் பார்த்திராத, கால்நடைகளுடன் பழக்கமில்லாத நகரத்து மக்களும் மாணவர்களும் இளைஞர்களும் இப்போராட்டத்தில் பல இலட்சக் கணக்கில் கலந்துகொண்டனர். ஜல்லிக்கட்டு வேண்டும் என்ற கோரிக்கை மட்டுமின்றி காவிரி நதிநீர் பங்கீடு, விவசாயிகள் தற்கொலை, வறட்சி நிவாரணம், மீனவர்பிரச்சினை, புதிய கல்விக்கொள்கை எதிர்ப்பு, நீட் தேர்வு எதிர்ப்பு, பணமதிப்பு நீக்கக் கொள்கை எதிர்ப்பு, பன்னாட்டு மூலதனத்தை எதிர்ப்பதற்கு அடையாளமாக பெப்சி கோக் போன்ற குளிர்பானங்கள் புறக்கணிப்பு என்ற பல கோரிக்கைகள் போராட் டத்தில் எழுந்தன. மத்திய, மாநில அரசாங்கங் களுக்கும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் கொள்கைகளுக்கும் எதிராக குமுறிக்கொண்டி ருக்கும் தங்களின் பலநாள் கோபத்தை மக்கள் பல கோரிக்கைகளைக் கொண்ட கோஷங்களின் வாயிலாக வெளிப்படுத்தினர். போராடும் குணம் மழுங்கிக் கொண்டிருந்த நிலையில் தமிழக மெங்கும் திரளான மக்கள் பங்கேற்ற இந்தப் போராட்டம், பரந்துவிரிந்த மக்கள் போராட்டமாக மாறத்துவங்கிய நிதர்சன உண்மையை யாரால் மறுக்கமுடியும்?

### ஜல்லிக்கட்டு விளையாட்டு தோன்றி நிலவிய காலமும் வீரத்தைப் பற்றிய விழுமியங்களும்

சங்க இலக்கியத்திற்கு முன்வாழ்ந்த தமிழ் சமுதாயத்தின் நடைமுறைகளும் பழக்க வழக்கங் களும் இயற்கையுடன் இயல்பாக இயைந்திருந்தன. பின்னர் அவை காலப்போக்கில் இயல், இசை, நாடகம் என்ற வளர்ச்சி பெற்றன. அப்படி வளர்ந்த காலக்கட்டத்திலிருந்த அரசுகளின் சமூகத்தில் பல்வேறு நடைமுறைகளும் உணர்வுகளும், சிறிது சிறிதாக இயல்பையும் யதார்த்தத்தையும் தாண்டி பெருமளவில் மிகைப்படுத்தப்பட்டன. அத்தகைய நிகழ்வுகளில் ஒன்றே ஏறுதழுவுதலாகும். "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையிலும் புல்லாளே ஆயமகள்" (முல்லைக்கலி – எட்டுத் தொகை) என்று அவ்விளையாட்டு விவரிக்கப் படுகிறது. அதாவது ஏறுதழுவ அஞ்சும் வீரமற்ற ஒரு ஆண்மகனை அடுத்த பிறவியிலும் ஒருபெண் நினைக்கமாட்டாள் என்பதாகும்.

வேளாண்மையை அடிப்படையாகக்கொண்ட நிலப்பிரபுத்துவ, பண்ணையடிமை, மன்னராட்சிக் காலக்கட்டங்களிலும் அவ்வுணர்வுகள் தொடர்ந்தன. அச்சமூகத்தின் வளர்ச்சிசார்ந்த பண்பாட்டு, வீரவிளையாட்டு நிகழ்வுகள் உலகெங்கிலும் பரவியிருந்தன. ரோமானிய நாகரீகங்களின் தொடர்ச்சியாக 'சிங்கத்துடன்' போரிடுவது, போர்த்துக்கீசிய, ஸ்பானிஷிய சமூகங்களில் காளை போன்ற விலங்குகளை அடக்குவது, எகிப்திய, ரோமானிய, அரேபிய சமூகத்தில் குதிரை சாரட் வண்டி போட்டிகள் நடப்பது என பல விளை யாட்டுகள் காணப்பட்டன. வெறியுணர்வும் கொடூரங்களும் அபாயமும் நிறைந்த விளை யாட்டுக்களை பிரபுகுலத்தினர், மன்னர்கள் முதலிய அதிகார உயர்படிகளில் இருந்தவர்களும் நிலவுடமையாளர்களும் ஊக்குவித்துவந்தனர். இத்தகைய உயிரையே பறிக்கும் ஆபத்தான விளையாட்டுக்களில் அடிமை மக்கள் ஈடுபடுவதைக் கோட்டைக் கொத்தளங்களின் உப்பரிகையில் அமர்ந்து அரசகுலத்தினரும் மேல் தட்டு வர்க்கத்தினரும் அவர்களது செல்வக் குழந்தைகளும் கண்டுகளித்தனர். விலங்குகளை மனிதர்கள்குருதி கொட்டத் தாக்குவதோடு அவ்விலங்குகளால் மனிதர்கள் தாக்கப்படுவதையும் குருதிக்கொட்டுவதையும் மிகவும் மகிழ்ந்து இரசித்தனர். உயர்ந்த சமூக நோக்கங்களில்லாத காலத்தில் இவ்விளையாட்டில் வெற்றிபெற்றவர் களுக்கு பாராட்டு, பெருமிதம், புகழ் மற்றும் பரிசுப் பொருளாக அடிமை நிலையிலிருந்து விடுதலை யையும் சிறிதளவு செல்வத்தையும் அளித்தனர். சமூக அந்தஸ்தும் சில நேரங்களில் கிடைத்தது. அரசர்களாலும் செல்வமிக்க நிலக்கிழார்களாலும் ஊக்குவிக்கப்பட்டதன் காரணமாக வீரத்தைப் பற்றிய அவர்களின் கருத்து, ஆளப்படும் பொதுமக்களின் கருத்தாகவும் விளையாட்டாகவும் பண்பாடாகவும் வீரவிழுமியங்களாகவும் மாறின.

### சமூக முன்னேற்றத்திற்கேற்ப வாழ்க்கையிலும் பழக்கங்களிலும் விளையாட்டு முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்ற தேவை இயற்கையானதாகும்

ஆனால் சமூக, பொருளாதார உற்பத்தி முறை களில் மாற்றங்கள் ஏற்பட ஏற்பட மனிதர்களின் வாழ்க்கையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய மாற்றங்களுக்கு உடை, கேளிக்கை, விளையாட்டு, ஆடல், பாடல், இசை போன்ற கலைகளும் விதிவிலக்கல்ல. மிகவும் ஆபத்தான விளையாட்டுக்கள், மனிதனின் உடல், உயிர் இவற்றுக்கு உலைவைக்கும் குருட்டுச்சாகசங்கள் காலப்போக்கில் கைவிடப்பட்டன. எனினும் அவற்றின் எச்சங்கள் அறிவியல், தொழில்நுட்ப யுகம் என்று அழைக்கப்படும் 21ம் நூற்றாண்டிலும் சில சமுதாயங்களில் தொடர்கின்றன. அதில் ஒன்றாகத்தான் ஜல்லிக்கட்டு இன்றும் தொடர்கிறது. காளையைக் கொண்டு மஞ்சு விரட்டு, ரேக்ளா ரேஸ் போன்ற வேறு பலவகை விளையாட்டு களும் கிராமங்களில் தொடர்ந்துகொண்டி ருக்கின்றன. மேலும், நிலப்பிரபுத்துவ காலத்தில்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ஜல்லிக்கட்டு போராட்டத்தில் மாணவர்கள், இளைஞர்கள் காட்டிய உறுதியும் கண்ணியமும் கட்டுப்பாடும்

3ம் பக்கத் தொடர்ச்சி

விவசாயத்தில் பிரதான உற்பத்திக் கருவியாக இருந்த கலப்பையும் வாகனமாக இருந்த மாட்டு வண்டிகளும் இன்று பெருமளவு குறைந்துவிட்டன. டிராக்டர்களும் அறுவடை எந்திரங்களும் விவசாயத்தில் புதிய உற்பத்திக் கருவிகளாகி விட்டன. கால்நடை வளர்ப்பின் நோக்கம் பாலுக்கும் இறைச்சிக்கும்தான் என பிரதானமாக மாறிவிட்டது.

விளையாட்டுக்களை தர்க்கத்தினடிப்படையிலும் அறிவியல் பார்வையோடும் நாகரீக வளர்ச்சியை கருத்தில்கொண்டும் அணுகவேண்டும். அத்தகைய அணுகுமுறையை இந்தியாவில் எந்த அரசாங்கமும் கொண்டிருக்கவில்லை. உலக விளையாட்டரங்கில் ஒருகாலத்தில் முத்திரை பதித்த சோசலிச நாடுகளில் அன்றைய பாட்டாளிவர்க்க அரசாங்கங்கள் சில கிராமப்புற சமூகங்களில் தொடர்ந்து கொண்டிருந்த பழைய சமூகத்தின் விளையாட்டுகளுக்கு நேரடி உதவி அளித்து ஆதரிக்கவில்லை என்பதற்கு, ரஷ்யாவின் விளையாட்டுகளை ஆய்வுசெய்து பார்த்தால் சான்றுகள் கிடைக்கின்றன. சுருங்கச் சொன்னால் பார்வையாளர்களிடமும் பங்கேற்பாளர்களிடமும் உயர்ந்த உணர்வெழுச்சியையும் உயர்ந்த ரசனையையும் ஊட்ட வேண்டிய விளையாட்டாக ஜல்லிக்கட்டு பரிணாம வளர்ச்சியடையவில்லை என்பதே உண்மையாகும்.

ஆனால் ஜல்லிக்கட்டு வேண்டும் என்று அதில் பங்கேற்றுவரும் இளைஞர்கள் வேண்டுகோள் வைக்கும் போது, வெறும் சட்டத்தைக் கொண்டு அதனைத் தடை செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி புதிய உள்ளடக்கத்தோடும் காலத்துக்கேற்ற மாறுதல்களோடும் புதிய விளையாட்டுக்களை உருவாக்காமல் தடை செய்வது மட்டுமே நன்மை பயக்காது. அது ஜனநாயக முறையும் ஆகாது. இந்த ஜனநாயக முறையைக் கடைபிடிக்க அரசாங்கங்கள் தவறிவிட்டன.

ஜல்லிக்கட்டு போராட்டத்தில் ஜனநாயகக் கூறுகள் இருந்தனவா என்பதையும் பார்க்க வேண்டியுள்ளது. ஜல்லிக்கட்டு ஒரு வீர சாகச விளையாட்டு எனில் பிற மாநில, பிற நாட்டு இளைஞர்களை கவர்ந்து பங்கேற்பாளர்களாக உள்ளிழுக்கவில்லையே, பிற பகுதிகளுக்கும் இது பரவவில்லையே ஏன் என்ற கேள்வி எழுவதை புறக்கணிக்கமுடியாது. விளையாட்டில் பங்கேற்பதை அறியாத விலங்குடன் விளையாட்டில் மனிதன் ஈடுபடும்போது என்ன விதிமுறைகள் அதனை கட்டுப்படுத்த முடியும் என்ற பிரச்சினையும் எழுகின்றது. ஜல்லிக்கட்டில் அரசாங்க கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் பின்பற்றப்படுகின்றன, காளையின் திமிலைப் பற்றி தழுவப்படுகின்றதே ஒழிய வீரர்களால் காளைக்கு ஆபத்து இல்லை என்று கூறப்படுகின்றது. ஆனால் காளைகள் வீரர்களுக்கு ஆபத்தை விளைவிக்காதவாறு எந்தக் கட்டுப்பாடுகளை கடைபிடிக்கும்? 2008–2014 காலத்தில் மட்டும் 43 பேர் இறந்திருக்கின்றனர். பார்வையாளர்கள் உட்பட பலர் படுகாயமடைந்திருக்கின்றனர். இவ்வருடம் 2017லில் தான் மிக அதிகமாக 7 பேர் இது வரை இறந்திருக்கின்றனர். மிருக வதை இல்லை என்பவர்கள் இந்த மனித வதை குறித்து என்ன கூறுகின்றனர்? இத்தகைய கருத்து மோதல்களும் விவாதங்களும் நடைபெற அனுமதித்திருந்தால் இப்போராட்டம் மேலும் ஒரு ஜனநாயக குணாம்சத்தைப் பெற்றிருக்க முடியும்.

தப்பித் தவறி யாராவது எதிர்க்கருத்தை தெரிவித்துவிட்டால் அவர் தமிழனின் விரோதி என முத்திரை குத்தப்படும் அபாயத்தையும் இந்த போராட்டம் தவிர்த்திருக்க வேண்டும். “உனது கருத்துடன் நான் முரண்படலாம், ஆனால் அதைச் சொல்லும் உனது உரிமைக்காக நான் இறக்கும் வரை போராடுவேன்” என்ற ஃபிரஞ்சுப் புரட்சியாளர் வால்டேரின் கூற்றை எப்படி நாம் மறக்க முடியும். யாராவது பாஜக ஆட்சியையும் பிரதமர் மோடியையும் விமர்சித்துவிட்டால் அவர்களை தேச துரோகி என ஆர்எஸ்எஸ்ஸினர் சொல்வதை மக்கள் கண்டிக்கின்றனர் அல்லவா.

### மைதானங்களையும் உபகரணங்களையும் வழங்கி பயிற்சியாளர்களையும் நியமித்து கிராமந்தோறும் விளையாட்டை வளர்க்க அரசாங்கம் தவறிவிட்டது

விளையாட்டு என்பது இளம்பருவம் முதல் அனைத்து வயதிலும் சமூகத்தில் மக்களுக்குத் தேவையாகும். மனித ஆற்றலின் உச்சத்தை எட்டுவதில் ஒவ்வொருமுறையும் சாதனைப் படைக்கும் தடகளப் போட்டிகள் முதல் ஒற்றுமையையும் ஒருங்கிணைப்பையும் எடுத்துக்காட்டும் குழு விளையாட்டுகள் வரை எண்ணற்ற விளையாட்டுகள் சர்வதேச அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இளைஞர்களின் உடலும் உள்ளமும் செம்மை பெற்று ஆளுமையை வளர்த்தெடுக்க, கல்வியுடன் உடற்கல்வியும் பல நாடுகளில் முக்கியத்துவம் கொடுத்து வழங்கப்படுகின்றன. விளையாட்டு கலாச்சாரம் என்பது, பிற மாநில பிற நாட்டு வீரர்களையும் மதித்துப் போற்றும் பண்பை வளர்க்கிறது. பங்கேற்பவர்களைப் போலவே விளையாட்டை ஆயிரக்கணக் கானோர் கண்டுகளிப்பதும் நல்ல கலாச்சாரமாகும். விளையாட்டில் ஈடுபடுவோர் தினசரி பயிற்சி, மனதை ஒருமுகப்படுத்தி விழிப்புணர்வுடன் இருத்தல், விடாமுயற்சி, தோல்விகளிலிருந்து துவண்டுவிடாத உறுதி, எதையும் சமாளிக்கும் துணிச்சல் போன்ற குணங்களையும் அனுபவ ரீதியாகப் பெறுகின்றனர். எனவேதான் ‘தேசிய, அறிவியல்பூர்வ, ஜனரஞ்சக விளையாட்டுகளை வளர்த்தெடுப்பீர்’ என்று 1949ல் சோசலிச நாடாக சீனா உருவான அந்த ஆண்டே உடற்பயிற்சி பணியாளர்களின் தேசிய மாநாட்டில் தோழர் மாசேதுங் அறைகூவல் விடுத்தார்.

கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் பொது விளையாட்டு மைதானங்களை ஏற்படுத்தி விளையாட்டுக் கருவிகளையும் பயிற்சியாளர்களையும் அமர்த்தி தான் விரும்பும் விளையாட்டில் எளிதாகவும் இலவசமாகவும் இளைஞர்கள் பங்குபெற எளிதாக்கும் நடவடிக்கைகள் எவையும் மத்திய, மாநில அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை. இளைஞர்கள் மாலை நேரங்களில் கூடுவதற்கு மைதானங்களுக்குப் பதிலாக மதுக்கடைகளை திறந்து அவை வருமானம் திரட்டிக்கொண்டிருக்கின்றன. விளையாட்டிற்காக ஒதுக்கும் சிறிதளவு நிதியையும் நிர்வாகிகள் வேறு செலவுகளுக்கு பயன்படுத்துகின்றனர்.

இவற்றையும் மீறி தனது சொந்த முயற்சியில் ஒரு மாரியப்பன் மாற்றுத்திறனாளிகளுக்கான உலக ஒலிம்பிக்ஸில் தங்கம் பெற்று வரமுடிந்திருக்கிறதென்றால், அது எவ்வளவு பெரிய சாதனை. அவரைப் பாராட்டி இரண்டு கோடி ரூபாய் பரிசளித்ததுடன் அரசாங்கம் விளையாட்டிற்கான தனது பொறுப்பை நிறுத்திக் கொண்டது. விளையாட்டுகளையும் விளையாட்டுக் கலாச்சாரத்தையும் பரவலாக வளர்த்திருந்தால் உலக அளவில் பல பரிசுகளை வென்று நமது இளைஞர்களும் சாதித்திருப்பார்கள் அல்லவா. தவிர, இன்று விளையாட்டு வணிகமயமாகி விட்டதையும் நாம் வேதனையுடன் பார்க்கிறோம்.

இளைஞர்களிடம் வீரமும் சாகசமும் விளையாட்டின் மூலம் வளர மாற்று விளையாட்டுகள் பரவலாக அறிமுகப்படுத்தப்படவில்லை. மலையேறுதல், பாயும் நதிகளில் படகுச் சவாரி, பாராகிலைடிங் மூலம் பறக்கும் போட்டி, ஸ்குபாடைவிங் என்ற கடலில் மூழ்கி பவளப் பாறைகளை நோட்டமிடுதல் போன்ற எண்ணற்ற சாகச விளையாட்டுகளிலும் கிராமப்புற இளைஞர்கள் கட்டணமின்றி ஈடுபட வசதிகள் செய்து தரப்படவில்லை.

ஆனால் இதையெல்லாம் செய்யத் தவறிய மத்திய, மாநில அரசாங்கங்களும் அரசியல் கட்சிகளும் இந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தை ஆதரித்தன. பிரபல சமூக ஆர்வலர்கள், திரைப்பட நடிகர்கள் என்று ஊரறிந்த பிரமுகர்களும் ஒட்டு மொத்தமாக ‘பாரம்பரியப் பண்பாடு’, ‘தமிழர் விளையாட்டு’ என்ற அடிப்படையில் ஆதரித்தனர். இவர்கள் யாரும் பழமையை வளர்க்கும் பண்பாட்டுக் கூறுகளிலிருந்து மாணவர்களை பயிற்றுவித்து விடுவிக்கும் நடவடிக்கைகளைப் பற்றிபேசவில்லை. வெறும் உணர்ச்சிபூர்வ உந்துதலையே அவர்களும் ஊட்டினார்கள்.

### பாரம்பரியமும் கலாச்சாரமும் ஒரு சமூகத்தின் வேர்களும் பலமும் ஆகும்

தமிழர் பாரம்பரியம் தாக்குதலுக்கு உள்ளாவதாக பிரச்சாரம் செய்யப்பட்டதும் மக்கள் பெருந்திரளாக ஜல்லிக்கட்டு போராட்டத்திற்கு வரக் காரணமாக இருந்தது என்பது உண்மையே. எந்த ஒரு சமூகமும் தனக்கென உயர்ந்த செழுமைமிக்க பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் கொண்டிருக்கும். அதில் வேர்களைப் பாய்ச்சித்தான் எதிர்காலத்தில் மேலும் உயர்ந்த நாகரிக வளர்ச்சியை நோக்கி அச்சமூகம் முன்னேறமுடியும். ஆனால் எதை விட வேண்டும் எதை பற்றவேண்டும் என்பதை எப்படி முடிவு செய்வது? முற்போக்கு சமூக போராட்டங்களுக்கும் மாற்றத்தை உருவாக்கும் புரட்சியை நோக்கி முன்னேறுவதற்கும் எவை உதவும் எவை தடுக்கும் என்பதை வைத்துத்தான் முடிவு செய்யமுடியும். நம் நாடு குதிராம் போஸ், பகத்சிங், சந்திரசேகர் ஆசாத், திலகர், நேதாஜி, பிரீதிலதா போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களைப் படைத்த பாரம்பரியம் கொண்டது. நமது தமிழ் மண்ணும் பாரதியார், வஉசி, சுப்ரமணிய சிவா, வீர வாஞ்சி, திருப்பூர் குமரன் என நீண்ட பட்டியல் கொண்ட சுதந்திரப் போராளிகளைக் கொண்ட, போர்க்குணமிக்க, செழுமையான அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்பு பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. அன்று, நம்மை அடக்கி ஒடுக்கிய எதிரி யார் என்பதை அவர்கள் தெளிவாக அறிந்திருந்தனர். தர்க்கரீதியாகவும் ஜனநாயக மனிதயியல் தத்துவத்தைக் கொண்டும் எதிரியைத் தோலுரித்துக் காட்டினர். ஒடுக்கப்படும் மக்கள்மீதிருந்த நேசத்தையும் அன்பையும் அளப்பரிய சொற்பொழிவுகளில், கட்டுரைகளில், கவிதை இலக்கியங்களில் அவர்கள் படைத்துக் காட்டினர். அவர்களின் கூர்மையான மதிநுட்பத்தை, அரசியல் ஆய்வை கற்றுணர்ந்து அந்த உயர்ந்த பாரம்பரியத்தை பேணிக் காத்து, அவர்கள் கண்ட கனவை நனவாக்க இன்று இளைஞர்கள் போராட வேண்டும். ஆனால் இந்த பாரம்பரியத்தைப் பற்றி யார் பேசுகிறார்கள்? மாறாக இன்று கலாச்சாரம் பாரம்பரியம் என்ற பெயரில் பழமைவாதமும் குருட்டுத்தனமும் வளர்க்கப்படுகின்றன என்பதை மறுக்க முடியுமா? இல்லையென்றால், மக்களை ஒடுக்குபவர்களே பாரம்பரியம் என்ற பெயரில் சிலவகையான பாரம்பரியக் கூறுகளை, சம்பிரதாயங்களை, ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டை ஆதரிப்பது ஏன்?

### ஜல்லிக்கட்டு போராட்டத்தில் மாணவர்களும் இளைஞர்களும் காட்டிய அபார உறுதியும் கண்ணியமும் கட்டுப்பாடும் பாராட்டத்தக்கவையாகும்

மேலே நாம் குறிப்பிட்ட கேள்விகளையெல்லாம் கடந்து சில நற்கூறுகளை இப்போராட்டத்தில் நாம் காண்கிறோம். உண்மையையும் சரியான திசைவழியையும் தேடிக்கொண்டிருக்கும் மாணவர்களிடம் சமூக அக்கறை முளைவிட்டிருப்பதை இப்போராட்டத்தின் வளர்ச்சிப்போக்கினூடே கண்ணுற்றோம். இப்போராட்டம் ஊட்டியுள்ள போராட்ட உணர்வை, ஜாதி–மதம் கடந்த ஒற்றுமையை, கணக்கற்ற மக்கள் திரளினர் கலந்து கொண்டபோதும் ஒழுங்கமைவிற்கு உட்பட்ட அராஜகம், வன்முறையிலிருந்து விடுபட்ட தன்மைகளை இப்போராட்டத்தில் காணமுடிந்தது. நீண்டகாலமாக மக்களிடம் அரசாங்கம் உருவாக்கியுள்ள போராட்டத்துக்கு எதிரான உணர்வுகளை இவை உடைத்து எறிந்திருக்கின்றன. போராடும் இளைஞர்களே போக்குவரத்தை சீர்செய்து கட்டுப்பாட்டை உருவாக்கி, களத்தில் குப்பைகளை அகற்றி சுத்தம் செய்து, குழந்தைகளுக்கு உணவுகளை வினியோகித்து, வெட்ட வெளியில் இரவிலும் அமர்ந்து கலைநிகழ்ச்சிகள் கவிதை இயற்றுதல் என பலப் பரிமாணங்களில் தங்கள் ஆக்கத்தைக் காட்டினர். ஆண் பெண் இருபாலரிடையே பாலியல் அசம்பாவிதங்கள்

தொடர்ச்சி 6ம் பக்கம்

## நந்தினி வழக்கு

# இளம்பெண்கள் மீது அதிகரிக்கும் பாலியல் தாக்குதல்களும் கொலைகளும் காவல் துறையின் தொடர் அலட்சியமும்

நான்காண்டுகளுக்கு முன்பு நாட்டையே உலுக்கிய தில்லி நிர்பயா கூட்டுப்பாலியல் வன்புணர்வின் கோரத்தை மிஞ்சும் வகையில் தமிழ்நாட்டில் அரியலூர் அருகே நந்தினி என்ற இளம்பெண்ணின் கூட்டுப்பாலியல் வன்புணர்வும் கொலையும் நடந்துள்ளது. இதன் இரணம் ஆறுவதற்கு முன்பாகவே சென்னையை அடுத்த போரூரில் ஆறே வயதான பெண்குழந்தை மிகக் கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டு கொலை செய்யப்பட்டுள்ளாள். ஜல்லிக்கட்டு போராட்ட இரைச்சலில் முன்னது அமுங்கிப் போய்விட, முதல்வர் நாற்காலிக்கான சண்டைக் கூச்சலில் பின்னது கவனம் பெறாமற்போனது. இருப்பினும் நல்லெண்ணம் கொண்டோரது தொடர் முயற்சியால் இக்குற்றங்கள் நிர்வாகம் மற்றும் பொது மக்களின் கவனம் பெற்று குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரியலூரை அடுத்த சிறுகடம்பூர் கிராமத்தைச் சேர்ந்த 16 வயது இளம்பெண் நந்தினி அதே ஊரைச் சேர்ந்த மணிகண்டன் என்பவரை காதலித்தார். இப்பெண் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதும் மணிகண்டன் உயர்ஜாதியைச் சேர்ந்தவர் என்பதோடு இந்து முன்னணி அமைப்பின் நிர்வாகிகளுள் ஒருவர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். இவ்வுறவின் விளைவாக நந்தினி கர்ப்பமடையவே தன்னை மணந்துகொள்ளுமாறு அவர் மணிகண்டனை வற்புறுத்தியுள்ளார். மணம் புரிந்துகொள்ளும் எண்ணமேதுமற்ற மணிகண்டன் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து நந்தினியை கடத்தி சில நாட்கள் வரையில் அடைத்து வைத்துள்ளார். அவரது கூட்டாளிகள் பலமுறை நந்தினியை கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு பின்னர் அவரைக் கருவறுத்து, கொலை செய்து, உடலை கிணற்றில் வீசிவிட்டு சென்றுள்ளனர் என்ற தகவல்கள் வெளிவந்துள்ளன. தொடர் போராட்டங் களின் விளைவாகவே மணிகண்டனும் அவனது கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டு தற்போது குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதில், நெஞ்சைப்பிழியும் விஷயம் யாதெனில், நந்தினி காணாமற்போனதாக புகார் அளிக்கப் பட்ட ஒரு வார காலத்திற்குப் பிறகுதான் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார். மணிகண்டன் கடத்தியதாக நந்தினியின் பெற்றோர் அளித்த புகாரை காணாமற்போய்விட்டார் என மாற்றி எழுதித் தரச்சொல்லி போலீசார் வற்புறுத்தி யுள்ளனர். அதன் பிறகும் மணிகண்டனை விசாரணை செய்வது உள்ளிட்ட எவ்வித நடவடிக்கைகளையும் போலீசார் மேற்கொள்ள வில்லை. அப்புகாரின் பேரில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் நந்தினியையும் சிசுவையும் காப்பாற்றியிருக்க இயலும். போலீசாரின் மெத்தனப்போக்கே இக்கொலைக்கு காரணமாகும்.

சென்னை போரூரில் மற்றொரு துர்ச்சம்பவமான பெண் குழந்தை ஹாசினியின் கொலை வழக்கில் அண்டை வீட்டுக்காரனே அத்தளிரை கசக்கி நுகர்ந்து கொன்றிருக்கிறான்.

பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டு பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டபோதும் பெண்களுக்கெதிரான பாலியல் குற்றங்கள் மேன்மேலும் அதிகரிப்பதற்கான காரணத்தை நாம் மீண்டும் ஆராயவேண்டியுள்ளது.

ஆழமாகப் புரையோடியுள்ள ஆணாதிக்க சிந்தனையிலிருந்தும் மனோபாவத்திலிருந்தும் நமது இந்திய சமூகம் இன்னமும் விடுபடவில்லை. அதாவது நிலப்பிரபுத்துவ கலாச்சாரம், விழுமியங் களை அறவே விட்டொழித்து நமது சமூகம் முழுமையாக ஜனநாயகமயமாக்கப்படவில்லை. இந்நாடு தேசமாக உருவெடுத்த சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் பலவீனத்தில்தான் இதற்கான காரணம் பொதிந்துள்ளது. இவ்விவாதம் ஒருபுறமிருக்கட்டும்.

ஆணாதிக்க மனோபாவம் மட்டுமே இத்தகு கொடூரங்களுக்குக் காரணம் என்று கூறிவிட முடியுமா? பெண் சுதந்திரம், சம உரிமை போன்ற சிந்தனைகள் கருத்தியல் ரீதியாகக்கூட உருவெடுக்காத மத்தியகால நிலப்பிரபுத்துவ சமுதாயங்களில்கூட பச்சிளம் பெண் குழந்தைகள் பாலியல் வல்லுறவுக்கு ஆளானதில்லையே! காதலித்த பெண்ணை கர்ப்ப மாக்கிவிட்டு கூட்டாளிகளோடு கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டதில்லையே! எனவே சீரழிந்த நவீன கலாச்சாரத்தின் பரவலும் இதற்கு முக்கியமான காரணமாகும்.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து சினிமாக்களிலும் ஊடகங்களிலும் பெண்களை மிக மோசமாக சித்தரிப்பது துவங்கிவிட்டது. உள்நாட்டு–வெளிநாட்டு ஏகபோகங்களின் நலன்களை மனதிற்கொண்டு மத்திய, மாநில அரசாங்கங்களால் அமல்படுத்தப்பட்ட தனியார்மய, தாராளமய உலகமயக் கொள்கைகள் உழைப்புச் சுரண்டலோடு கூடவே கலாச்சார சீரழிவிற்கும் வழிவகுத்தன. சல்லாபமும் கேளிக்கைகளுமே வாழ்வின் ஆனந்தம் என்று போதிக்கப்பட்ட உலகில் பெண் வெறும் காட்சிப்பொருளானாள். அதுகாறும் சொற்பமாகவேனும் எஞ்சியிருந்த ஜனநாயக மாண்புகளும் விழுமியங்களும் மறைந்து யதேச்சாதிகாரமும் நுகர்வுக் கலாச்சாரமும் பரவத்துவங்கின. இவற்றோடு திட்டமிட்டு பரப்பப் பட்ட ஆபாசம், வன்முறை, போர்னோகிராஃபி ஆகியன பாலியல் வக்கிரங்களை வளர்க்கின்றன. மதுபானங்கள் போதைப்பொருட்களின் திட்ட மிட்ட பரவல் மனிதனின் சிந்தனைத் திறனை மழுங்கடித்து நல்லது கெட்டதை ஆராயும் மனோபாவம், பொறுப்புணர்வு, சுயமரியாதை ஆகியவற்றை அழித்துவிடுகிறது. இதோடு பாலியல் வக்கிர உணர்வு சேரும்போது குற்றங்கள் பல்கிப்பெருகத் துவங்கின. இதனால்தான், குற்றங்கள், குறிப்பாக பாலியல் குற்றங்கள் முன்னெப்போதைக் காட்டிலும் அதிகரித்து மிகக் கோரமான வடிவங்களையும் எடுக்கிறது.

இத்தகைய சமுதாயத்தில் காதல் வலை விரித்து பெண்களை அனுபவித்தபின் எறிவதும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இச்சூழ்நிலையில் காதல் என்றால் என்ன என்பது குறித்தும் சினிமாக் களிலும் ஊடகங்களிலும் சித்தரிக்கப்படுவதுதானா என்பது பற்றியும் காதலுக்கான அடிப்படை என்னவாக இருக்கவேண்டும் என்பது பற்றியும் ஆழமான கருத்தியல் விவாதங்களில் மக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர், ஈடுபட்டு உண்மையைக் கண்டறியவேண்டும். பல மொழிகளைச் சேர்ந்த நவீன செவ்விலக்கியங் களிலும் சிறந்த கலைப்படைப்புகளிலும் சித்தரிக்கப்பட்டுள்ள உண்மையான காதல், காதலுக்கான அடிப்படை ஆகியவற்றை கற்றுணர வேண்டும். நல்ல கலைகள், இலக்கியங்கள் ஆகியவற்றுக்கான ரசனையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

மதுபானம், போதைப்பொருட்கள், வன்முறைக் காட்சிகள், ஆபாசப் படங்கள் போர்னோகிராஃபி காட்சிகள் ஆகியவற்றிற்கும் குற்றங்களுக்கும், குறிப்பாக பாலியல் குற்றங்களுக்கும் நேரடி தொடர்பிருக்கிறது என்பது பல்வேறு ஆய்வுகளி லிருந்து தெரியவருகிறது. ஆயினும், அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதற்கு சற்றும் யோசிக்காத அரசாங்கங்கள் ஆபாசம், வன்முறை, போர்னோகிராஃபி ஆகியவற்றை தடை செய்வதற்கும் இவற்றின் பரவலைத் தடுப்பதற்கும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்வதில்லை. அவ்வாறு ஒருமுறை தடை செய்தபோது தனிமனித சுதந்திரத்தை பறிப்பதாக அத்தடைக்கு எதிர்ப்புக் கிளம்பவே நீதிமன்றம் அத்தடையை விலக்கிவிட்டது. அவ்வாறு எதிர்ப்பு தெரிவித்த வர்கள் பெரும்பாலும் படித்த, நகர்ப்புற, மத்திய வகுப்பு மற்றும் உயர்குடி பிரிவைச் சேர்ந்தவர்களேயாவர்.

மேலே விவரித்துள்ள சமூக கலாச்சார சூழலில் இவற்றின் பரவல் பாலியல் குற்றங்கள் பெருகு வதற்கு காரணமாக விளங்குவது ஆய்வுகளில் தெரியவந்துள்ள நிலையில், இச்சூழலை நல்ல விதமாக மாற்றும் வரையிலேனும் இவற்றுக்கு தடை விதித்தேயாகவேண்டும். இதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவிப்பார்களெனில், அவர்களின் சமூகப் பொறுப்புணர்வை நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டும். சுதந்தரம் என்றால் சமூகத்தின் யதார்த்த சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டு அதனோடு தொடர்பற்ற, சமூக ஒழுங்குக்கு கட்டுப்படாத, கட்டற்ற சுதந்திரம் என்று பொருளாகாது. அதற்கு அதீத சுதந்திரம் என்று பெயர். சமூகத் தேவையை அங்கீகரித்து அதற்கேற்ப தனது விருப்பு வெறுப்புகளையும் சிந்தனைகளையும் நடவடிக்கைகளையும் தகவமைத்துக் கொள்வதுதான் சுதந்திரமாக இருப்பதன் உச்ச நிலையாகும். அன்றேல், அது வெறும் சலுகையாக குறுகிவிடும்.

எனவே, கோரமான பாலியல் குற்றங்களை அடுத்தடுத்து எதிர்கொள்கின்ற நாம், இது போன்ற விஷயங்களான, காதல், சுதந்திரம், ஆபாசம், வன்முறை, பெண்களை காட்சிப்பொருளாக்குதல், நுகர்வு கலாச்சாரம், சமூகப் பொறுப்புணர்வு போன்ற கேள்விகளை பொது வெளியிலும் ஊடகங்களிலும் விவாதப்பொருள் ஆக்குவோமாக! பெண்கள் மீதான குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு போராடுகையில், இவ்விவாதங் களையும் ஆணாதிக்க வெறித்தன மனோபாவத்திற் கெதிரான போராட்டத்தோடு ஒன்றிணைத்து வெற்றிகரமான ஜனநாயக பேரியக்கங்களை வளர்த்தெடுப்போமாக! □

# தோழர் லெனின் அவர்களின் 93வது நினைவுதினம்



ஜனவரி 21 அன்று லெனின் உருவப்படத்திற்கு கொல்கத்தாவில் உள்ள மத்திய அலுவலகத்தில் தோழர் ரஞ்சித் தர், பொலிட்பீரோ உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மாலை அணிவித்து செவ்வணக்கம் செலுத்தும் காட்சி




ஜனவரி 21 அன்று சென்னையில் உள்ள மாநில அலுவலகத்தில் தோழர் ரெங்கசாமி, கட்சியின் மாநிலச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார்



ஜனவரி 21 அன்று லெனின் உருவப்படத்திற்கு தேனியில் உள்ள அலுவலகத்தில் தோழர் சத்தியமூர்த்தி, கட்சியின் மதுரை–திண்டுக்கல்–தேனி மாவட்டச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார்

# ஜல்லிக்கட்டு போராட்டத்திலிருந்து உரிய பாடங்களை கற்று எதிர்கால போராட்டங்களை வெற்றிகரமாக்குவது மாணவர்கள் இளைஞர்களின் கடமையாகும்

*4ம் பக்கத் தொடர்ச்சி*

கடுகளவும் காணப்படவில்லை. அரேபிய வசந்தம் எனக் கூறப்படும் போராட்டத்தில் இருந்தது போன்று ஒற்றுமை உணர்வுகளை இங்கும் உருவானதைக் கண்டு நாடே வியந்தது. சீர்காழி, நாகை போன்ற தென் மாவட்டங்களில் கொட்டும் மழையிலும் இரவுபகலாக மக்கள் போராட்டக் களத்தில் இருந்தனர். இத்தகைய பெருமைதரும் நிகழ்வுகளை அடுக்கிக்கொண்டேபோகலாம். ஒரு கோரிக்கையை மக்கள் தங்கள் கையில் எடுத்து விட்டால் எந்த திசையை நோக்கிச் செல்லும் என்பதற்கு இவை ஒரு எடுத்துக்காட்டாகும். போராட்டத்தின் நடுவே வெறிஉணர்வுகள், மத, இன வெறிவாதக் குரல்கள் ஒலித்தாலும் அதற்கு மாணவர்களும் மக்களும் முற்றிலும் பலியாகவில்லை என்பதை அவர்களின் இதர தேடல்கள் விளக்குகின்றன.

போராட்டம் என்பது கலாச்சாரத்தரத்தையும் சமூக விழிப்புணர்வையும் உயர்த்துகின்றது என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும். சமூகத்தில் நிலவிவரும் மனித உரிமை மீறல்கள், ஊழல், பட்டினி, வறுமை, வேலைவாய்ப்பின்மை, உலகமயத்தின் மக்கள் விரோத அம்சங்கள், விவசாயிகள் தற்கொலை போன்ற கோரிக்கைகளுக்கும் இதுபோன்ற போராட்டங்களில் ஈடுபடவேண்டும் என்ற முன்மொழிவுகளும் இளைஞர்களால் வைக்கப்பட்டுள்ளன.

**விரக்திக்கும் சோர்வுக்கும் பலியாகிவிடாமல் மீண்டும் புத்துயிர்பெற்று மக்களின் உண்மையான கோரிக்கைகளுக்காக மாணவர்களும் இளைஞர்களும் போராட வாரீர்!**

அறிவியலின் அளப்பரிய வளர்ச்சிக்குப் பின்னரும் வறுமை, வேலையின்மை, கொள்கை–கோட்பாடுகளற்ற அரசியல், ஊழலில் ஊறித் திளைக்கும் தலைவர்கள், பாலியல் வன்கொடுமைகள், கலாசாரச் சீரழிவு என மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடருவதேன் என்ற கேள்விக்கு இளைஞர்களும் மாணவர்களும் தேடினால் கிடைக்கும் விடை என்னவாக இருக்கின்றது? இவற்றுக்கெல்லாம் காரணம் லாபநோக்கம் கொண்ட உற்பத்திமுறை, சந்தைப்பொருளாதாரம், இது உருவாக்கும் செல்வக்குவியலைக் கொண்ட பணக்கார வர்க்கம், இவர்களைப் பாதுகாக்கும் அரசு அமைப்பு, அதற்கிருக்கும் அரசியல் அதிகாரம் என்பதெல்லாம் புரியவரும். அரசு என்பது நிர்வாகம், நீதித்துறை ராணுவம்–காவல்படை ஆகிய அங்கங்களைக் கொண்ட அடக்குமுறை இயந்திரம் என்றார் காரல் மார்க்ஸ். அரசாங்கத்திற்கெதிராக மக்கள் திரும்ப நினைத்தால் என்னகதியாகும் என்பதை அடக்குமுறை இயந்திரமான காவல்துறை மக்களுக்குப் பாடம் புகட்டிவிட்டது.

அரசியல் இல்லை, தலைவர்கள் இல்லை, தன்னெழுச்சியாக நடக்கும் புரட்சி என்று ஜல்லிக்கட்டுப் போராட்டம் ஊடகங்களாலும் பல தனிநபர்களாலும் வருணிக்கப்பட்டது. இது அரேபிய வசந்தம் போன்றது என்றும் புகழப்பட்டது. இப்படி, அரசியலற்று தலைமையின்றி நடந்த அரேபிய வசந்தம் எதில் முடிந்தது? டுனீஷியா, எகிப்து ஆகிய அந்த நாடுகளில் ஒரு சர்வாதிகார ஆட்சியை மற்றொன்றால் இடமாற்றம் செய்ததே தவிர ஜனநாயகத்தை வென்றெடுக்க முடிந்ததா? எடுத்துக்காட்டாக சுமார் 30 ஆண்டுகளாக எகிப்தில் நடந்த முபாரக்கின் சர்வாதிகார ஆட்சி, இறுதியில் அமெரிக்காவின் ஆதரவு பெற்ற ஒரு ராணுவ சர்வாதிகார ஆட்சியால் இடமாற்றம் செய்யப்பட்டது. தன்னெழுச்சி என்று வருணிக்கப்பட்ட போராட்டத்தில் அமெரிக்க உளவாளிகளும் அவர்களின் ஆதரவுபெற்ற சக்திகளும் தலைவர்களும் வழிநடத்திக்கொண்டிருந்ததை அச்சமயம் அவர்களால் உணர முடிந்ததா?

இருந்தாலும் தவிர்க்கயியலாமல் படிப்படியாக ஜல்லிக்கட்டு போராட்டக்களத்தில் அரசியல் விவாதங்கள் முளைத்தன, கேள்விகள் எழுந்தன. அரசியலை மக்கள் வெறுக்கவில்லை, மாறாக இன்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளையும் மக்களைப் பிளவுபடுத்தும் மதவெறி, இனவெறி, ஜாதி வெறி சக்திகளையும் அவர்களின் அரசியலையும்தான் மக்கள் வெறுத்தனர். 'அரசின் கொள்கைகளை ஆய்வு செய்வதும் விமர்சிப்பதும் அரசியல் என்றால் அதில் பங்கேற் பதைத்தவிர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேறு வழியில்லை' என்றார் நேதாஜி. அந்தக் கருத்திற்கிணங்க அரசியல் விவாதங்கள் போராட்டக்களங்களில் நடந்தன.

அதேபோல, போராட்டத்தை கைவிடுங்கள் என்று யாரோ சொல்வதும், மக்கள் உணர்வுகளுக்கு மாறாக, மக்கள் சார்பாக பேசுவதாக யாரோ பேட்டி கொடுப்பதும் இலட்சோப இலட்சம் போராடும் மக்களுக்கு தங்களை பிரதிநிதிப்படுத்தும் தலைமை இல்லையே என்ற வெற்றிடத்தை உணரவைத்தது. ஜாதி, மத, இன மொழி உணர்வுகளைக் கடந்து, நாட்டின் சரியான பாரம்பரியத்தை உயர்த்திப்பிடித்து மக்களின் நியாயமான உணர்வுகளையும் கோரிக்கைகளையும் புரிந்துகொண்டு அவர்களின் நலனைப் பிரதிபலித்துப் போராடிவரும் கட்சி எது, தலைமை எது என்பதை மக்கள் கண்டறிய வேண்டும். எந்தப் பிரச்சினையையும் தீர்க்காத இன்றைய சமூக அரசியல் பொருளாதார அமைப்பை முற்றிலும் மாற்றியமைக்கும் தத்துவம் எதுவாக இருக்க வேண்டும் என்பதையும் சீரிய விவாதத்தின் மூலம் கண்டறிய வேண்டும். அதன் வழிகாட்டுதலில் ஒவ்வொரு மக்கள் போராட்டத்தின்போதும் ஒரு போராட்டக்குழுவை ஏற்படுத்திக்கொள்வது மிகமிக அவசியமாகும். அத்தகைய போராட்டக் குழுவை வழிநடத்தும் தலைமை, உயர்ந்த சித்தாந்தம், உயர்ந்த கலாச்சார நீதி நெறிக் கோட்பாடுகள் ஆகியவற்றால் வழிநடத்தப்பட வேண்டும்.

ஜல்லிக்கட்டு போராட்டத்தின் இறுதிக்கட்டம் காவல்துறையின் கடும் தாக்குதலால் ஒடுங்கிப் போனதாக இருக்கலாம். இதனால் மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் ஏற்படும் வெறுப்பும் விரக்தியும் ஆளுவோரின் கரங்களைத்தான் பலப்படுத்திவிடும். எக்காரணம் கொண்டும் விரக்திக்கு நாம் ஆட்பட்டுவிடக் கூடாது. போராட்டத்தில் எழுப்பப்பட்ட, மக்களின் நியாயமான, வாழ்க்கைப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட கோரிக்கைகளை மீண்டும் கையிலெடுத்து போராட முன்வரவேண்டும். ஜாதி, மத, இன பேதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு நம்மிடம் எழுந்த ஒற்றுமையை இழந்துவிடக் கூடாது. மக்கள் பிரச்சினையை கையிலெடுத்தால் மக்களின் ஆதரவு கிட்டும் என்ற படிப்பினை, நம்மை மேலும் போர்க்குணமிக்க போராட்டங்களுக்குத் தயாராக்கட்டும். இன்றைய சமூக–பொருளாதார அமைப்பே வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கப் போவதில்லை. சமூக வரலாற்று விதிகளின்படி அடுத்தக் கட்டத்திற்கு அதனை எடுத்துச் செல்லும் போராட்டத்தில், இதற்கு முன்பிருந்ததைப் போலவே, மாணவர்களும் இளைஞர்களும்தான் முன்னணிப் படையினராக செயல்பட வேண்டும். இந்த புரட்சிகர வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற மாணவர்களும் இளைஞர்களும் முன்வாரீர் என பேருவகையுடன் அழைக்கிறோம். ▫

# ட்ரம்பிற்கு எதிரான உலகம் தழுவிய ஆர்ப்பாட்டங்களை ஏஐஏஐஎஃப் வரவேற்கின்றது

இனவாதியும், புலம் பெயர்ந்தோரின் எதிரியும், ஆணாதிக்கவாதியும், பெண்ணின வெறுப்பாளரும், ஜனநாயக விரோதியுமான டொனால்ட் ட்ரம்ப் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவியேற்பதை எதிர்த்து நடைபெற்ற மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரங்கம்-All India Anti-Imperialist Forum - AIAIF-ஏஐஏஐஎஃப்) வரவேற்கின்றது. மாணவர்கள், தொழிலாளர்கள், ஏழை மக்கள், புலம் பெயர்ந்தோர், குடியுரிமை ஆர்வலர்கள், பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் என அனைத்துப்பகுதி மக்களும் லட்சக்கணக்கில் திரண்டு இதுவரையில் கண்டிராத வகையில் எதிர்த்தனர். மெக்சிகோ – அமெரிக்க எல்லையில் பெருஞ்சுவர் கட்டப்போவதாகவும், புலம் பெயர்ந்த லட்சக்கணக்கான மக்களை திருப்பி அனுப்பப்போவதாகவும், முஸ்லிம்களை கணக்கெடுத்து பதிவேட்டில் பதியப்போவதாகவும், சிறைக்கைதிகளை சித்திரவதை செய்திட அனுமதிக்கப்போவதாகவும், அணு ஆயுதங்களை பயன்படுத்தக்கூட தான் தயங்கப்போவதில்லை என்றும் டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத்தியிருக்கின்றார். அவரது பேச்சுக்கள் பெரும்பாலும் மனநிலை பாதிக்கப்பட்டவர் உளறுவதைப் போன்று தோன்றுகின்றது.

அவரது அதிதீவிர வலதுசாரி திட்டத்தையும் அவர் முன்வைத்துள்ள கொள்கைகளையும் நிராகரிக்க போராடும் மக்களுக்கு நியாயமான முகாந்திரம் இருக்கின்றது. டொனால்ட் ட்ரம்ப் போன்ற மனிதரை தேர்ந்தெடுத்திருப்பது முதலாளித்துவ அமைப்பின் ஆழ்ந்த நெருக்கடியை பிரதிபலிப்பதோடு அதிலிருந்து வெளிவர இயலாதிருப்பதால், மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக முதலாளித்துவமானது அதிதீவிர–வலதுசாரி வெறிவாத வெறுப்புப்பேச்சினை எழுப்பியும் மக்களின் உண்மையான பிரச்சினைகளிலிருந்து அவர்களின் கவனத்தை திசைதிருப்பிடவும் முயல்கின்றது.

ஜனநாயக கட்சியானாலும் சரி, குடியரசுக்கட்சியானாலும் சரி, இவையிரண்டும் மக்கள் வாழ்வுதனில் உள்ள எந்தப்பிரச்சினைக்கும் தீர்வு தர இயலாது என்பதோடு கடந்த காலத்தில் பின்பற்றியதைப் போல், எதிர்காலத்திலும் முதலாளித்துவ ஆதரவு, மக்கள் விரோத உள்நாட்டு, அயல்நாட்டு கொள்கைகளையே அவை பின்பற்றும்.

முதலாளித்துவ அமைப்பே தமது இன்னல்களுக்கான ஆணிவேர் என்பதையும் அதற்கான உண்மையான தீர்வு என்பது தொடர்ச்சியான போராட்டங்களின் மூலம் இவ்வமைப்பினை தூக்கியெறிவதில்தான் உள்ளது என்பதையும் அமெரிக்க மக்கள் புரிந்து கொள்ள இப்போராட்டங்கள் முதல் படியாக அமையுமெனவும் அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரங்கம் நம்புகின்றது.

தற்போதைய வெகுஜன எழுச்சி இயக்கங்கள் சரியான தலைமையின்கீழ் படிப்படியாக முன்னேறி, மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிப்புகளை பாதுகாத்திடவும் இறுதியில் அது முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சிக்கு வழிவகுத்து உண்மையானதொரு விடுதலையை அமெரிக்க மக்களுக்கு கொணர்ந்திடுமென நாங்கள் நம்புகிறோம். ▫

டாக்டர் கே ஆர் சௌத்ரி
தலைவர், ஏஐஏஐஎஃப்
*24 ஜனவரி, 2017*

# சென்னையிலும் மதுரையிலும் போராடிய மக்கள் மீது நடந்த தாக்குதலை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி ஜனவரி 06, 2017 அன்று வெளியிட்ட அறிக்கை:*

மத்திய பாஜக அரசாங்கம் 500, 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என அறிவித்த 50வது நாளான 31.12.2016 அன்று சிபிஐ (எம்)மின் வெகுஜன அமைப்புக்களான இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் அக்கட்சியின் ஆதரவாளர்கள் சென்னை, மேடவாக்கம் வங்கி முன்பும் ஜனவரி 3ம் தேதியன்று மதுரை பெரியார் பஸ்நிலையம் அருகிலும் நடந்த அமைதியான போராட்டத்தின் மீது போலீசார் நடத்திய மனிதத் தன்மையற்ற காட்டுமிராண்டித் தனமான கொலைவெறித் தாக்குதலை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி வன்மையாக கண்டிக்கிறது.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது போலீசார் கொடூரமான தாக்குதல் தொடுத்தும், பெண் தொண்டர்களின் மீது பாலியல் சீண்டல் களிலும் ஈடுபட்டுள்ளதை அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறோம். நியாயமான கோரிக்கை களை முன்வைத்து போராடியவர்கள் மீது இது போன்று காட்டுமிராண்டித்தனமாகவும் பாலியல் வக்கிரத்தோடும் தாக்குதல்கள் நடத்தப்படுவதைக் காண்கையில் முதலாளித்துவ அரசுகள் மென்மேலும் ஜனநாயகத்திலிருந்து விலகி ஃபாசிசத்தை நோக்கி செல்கின்றன என்பது தெளிவாகிறது.

ஒரு ஜனநாயக நாட்டில் எதிர்ப்பு தெரிவிப்பதும் போராடுவதற்கான உரிமையும் அடிப்படை உரிமைகளாகும். ஜனநாயக மரபுகள் தழைப்பதற்கு இவை அவசியமாகும். ஆனால், தமிழகத்தில் சென்னையிலும் இதர இடங்களிலும் ஜனநாயக ரீதியாக எதிர்ப்பு தெரிவிப்பதற்கான உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. காலனியாதிக்கக் காலத்தில் போடப்பட்ட ஃபாசிச சட்டங்களை (போலீஸ் சட்டம் 1861 – பிரிவு 30 ii, சென்னை நகர போலீஸ் சட்டம் பிரிவு 41 மற்றும் இது போன்ற சட்டங்கள்) தமிழ்நாடு அரசாங்கம் முறையான காலமுறை இடைவெளியில் திரும்பத் திரும்ப புதுப்பித்து, தொடர்ந்து அமல்படுத்திக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் காலனியாதிக்கக் காலத்தில்கூட இச்சட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டதில்லை.

படுகாயமுற்று உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு, மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ள தனது தொண்டர் களைக்கண்டு வேதனையுற்றுள்ள சிபிஐ(எம்) கட்சி மற்றும் அதன் முன்னணி அமைப்புகளோடு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி தோழமை உணர்வுடன் துணை நிற்கிறது. அதோடு, கீழ்க்கண்ட கோரிக்கை களை முன்வைத்து மாநில அரசாங்கத்திற்கு எதிராக ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கங்களை கட்டியமைத்திட முன்வருமாறு பிற இடதுசாரி கட்சிகளையும் நற்சிந்தனையும் ஜனநாயக எண்ணமும் கொண்ட அறிஞர் பெருமக்களையும் கேட்டுக்கொள்கிறது.

- *ஜனநாயகத்தின் குரல்வளையை நெறிக்கும் ஃபாசிச சட்டங்களை உடனடியாகத் திரும்பப்பெறுக!*
- *தாக்குதலுக்குள்ளான தோழர்கள் பூரண நலம் பெறும் வரையில் உரிய மருத்துவ சிகிச்சையை முற்றிலும் இலவசமாக வழங்கிடுக!*
- *சென்னையிலும் பிற பகுதிகளிலும் தாக்குதல் களில் ஈடுபட்ட போலீசார் மீதும், அவர்களுக்கு ஆணைகளை பிறப்பித்த உயரதிகாரிகள் மீதும் இத்தாக்குதலுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மற்றும் பிறர்மீதும் துறைப்பூர்வ மாகவும் சட்ட ரீதியாகவும் உடனடி நடவடிக்கை கள் மேற்கொள்க!*
- *உண்மை நிலவரங்களை அறிந்துகொள்வதற்கு நீதி விசாரணைக்கு உத்தரவிடுக!* ▫

# நவம்பர் புரட்சி...

*1ம் பக்கத் தொடர்ச்சி*

தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் அதிகபட்ச ஜனநாயகத்தை வழங்குகின்றது; அதே நேரத்தில், அது பூர்ஷ்வா ஜனநாயகத்துடன் ஒரு முறிவை ஏற்படுத்தியதன் அடையாளமாகவும் மற்றும் ஒரு புதிய சகாப்தம் படைக்கும் ஜனநாயகம், அதாவது பாட்டாளிவர்க்க ஜனநாயகம் அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உதிப்பதன் அடையாளமாகவும் காணப்படுகின்றது... இந்த வெற்றியானது இன்னும் இறுதி வெற்றியாகிவிடவில்லை, மேலும் நமது அக்டோபர் புரட்சியினால், நம்பமுடியா சிரமங் களையும் கஷ்டங்களையும் கடந்து, என்றுமில்லாத துன்பங்களை அனுபவித்து, அதனுடன் வரிசை யாக வந்த நமது தீவிர பின்னடைவுகள் மற்றும் தவறுகளுடன் இவ்வெற்றியானது அடையப் பெற்றிருக்கின்றது.

உலகின் மிகவும் பலம் வாய்ந்த, மிகவும் வளர்ச்சி யடைந்த நாடுகளின் ஏகாதிபத்திய போர்களை ஒரு தனித்த பின்தங்கிய மக்கள், பின்னடைவுகளைத் தாங்கிக்கொள்ளாமல் தவறுகளைப் புரிந்திடாமல் எதிர்த்து நின்றிருக்க முடியும் என எவ்வாறு எதிர் பார்க்க முடியும்! நமது தவறுகளை ஒப்புக்கொள்ள நாம் அஞ்சுவதில்லை, அவைகளை எவ்வாறு சரி செய்துகொள்வது என்பதற்காக அவற்றை நாம் உணர்ச்சிவயப்படாமல் ஆராய்ந்திடல் வேண்டும். ஆனால் நிலவுகின்ற உண்மை யாதெனில், பல நூற்றாண்டுகளில், ஆயிரமாயிரம் ஆண்டுகளில், முதன் முறையாக அனைத்து அடிமை எஜமானர் களுக்கெதிராகவும் தொடுக்கப்பட்ட அடிமைகளின் புரட்சியினால், அடிமை எஜமானர்களுக்கிடையே யான போருக்கு “பதிலடி” தரப்படும் என்று அளிக்கப் பட்ட வாக்குறுதியானது முற்றிலும் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது. அனைத்து சிரமங்களுக்கிடையிலும் அது நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

நாம் இப்போதுதான் துவங்கியிருக்கின்றோம். எப்போது, எந்நாளில், எந்நேரத்தில் எந்த நாட்டு பாட்டாளிகள் இச்செயல்முறைப்போக்கை நிறை வேற்றிடுவார்கள் என்பது முக்கியமல்ல. பனிக்கட்டி உடைக்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் பிரதான விஷயம்; பாதை திறந்துவிடப்பட்டிருக்கின்றது, வழியானது காட்டப்பட்டிருக்கின்றது...

ஏகாதிபத்தியப் போர் மற்றும் ஏகாதிபத்திய உலகின் பிடிகளிலிருந்து இம்மண்ணின் முதல் கோடி யெண்ணிக்கை மக்களை முதல் போல்ஷ்விக் புரட்சி யானது விடுவித்திருக்கின்றது. இதன் பின்னர், அத்தகைய போர்கள் மற்றும் அத்தகைய ஒரு உலகத்திலிருந்து ஏனையோரை விடுவித்திடும் பணியை புரட்சிகள் செய்திடும்...

*(ஆதாரம் : வி ஐ லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி 33 , முன்னேற்றப்பதிப்பகம், மாஸ்கோ)*

# தமிழகத்தில் முதலமைச்சர் பதவிப் போட்டியால் எழுந்துள்ள சூழ்நிலை குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி பிப்ரவரி 13. 2017வில் வெளியிட்ட அறிக்கை:*

தமிழகத்தில் ஆளும் கட்சியான அஇஅதிமுக வில் நடந்துகொண்டிருக்கும் முதலமைச்சர் பதவிக்கான போட்டி, முதலாளித்துவ அரசியலின் உருவாக்கமான சுயநலம், பதவிவெறி, அகம்பாவம், அணித்தாவல், துரோகம் போன்ற இழிவான செயல்களின் வெளிப்பாடாகும். இப்போட்டி, முதலாளித்துவ சுரண்டலால் நெருக்கடியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவோ அவற்றை மையமாக வைத்தோ எழுந்ததல்ல.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கத்தின் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பதிலாக, ஆளுநர், காலம் தாழ்த்துவது பாராளு மன்ற ஜனநாயக மரபுகளை காலில் போட்டு மிதிப்பதற்குச் சமமாகும். மேலும், இத்தகைய காலதாமதம், குதிரை பேரம் உக்கிரமாக நடப்பதற்கு வழிவகுக்கும். அரசியல் லாபம் அடைய மத்திய பாஜக அரசாங்கத்திற்கு உடந்தையாக ஆளுநர் செயல்படுகிறார் என்று எழும் குற்றச்சாட்டையும் ஒதுக்கிவிட முடியாது.

அதேசமயம், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை இல்லாதபோது, தலைநகர் சென்னையில் காவல்துறை அணிவகுப்பு நடந்த தென்றும் விடுதிகளில் சோதனை நடத்துமாறு காவல்துறைக்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளதாகவும் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது, இயல்பு வாழ்க்கையில் இருக்கும் மக்களை அச்சுறுத்தும் செயலாகும். இவையனைத்தும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை கலைத்துவிட்டு ஆளுநர் ஆட்சியைப் திணிப்ப தற்கான அபாயகரமான சூழலை உருவாக்கிவிடும். ஆளுநரின் இச்செயல்பாடுகள் குறித்து விழிப்புடன் இருப்பதுடன் இதனைக் கண்டிக்கவும் முன்வருமாறு ஜனநாயக எண்ணம் கொண்ட அனைவருக்கும் எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநில அமைப்புக் கமிட்டி அறைகூவல் விடுக்கிறது. ▫

# ஜனவரி 23, நேதாஜி அவர்களின் 120வது பிறந்ததினம் ஏஐடிஎஸ்ஓ, ஏஐடிஓய்ஓ, ஏஐஎம்எஸ்எஸ் அனுஷ்டிப்பு



சென்னையில் ஜனவரி 28 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தோழர் செபஸ்டியன் ஏஐடிஓய்ஓவின் மாவட்டச் செயலாளர் உரையாற்றுகிறார்




மதுரையில் ஜனவரி 23 அன்று நேதாஜி சிலைக்கு மாலை அணிவித்து தோழர் வால்டேர், ஏஐடிஎஸ்ஓவின் மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார்



மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் ஜனவரி 27 அன்று நடைபெற்ற நேதாஜி அவர்களின் புகைப்பட மேற்கோள் கண்காட்சி



தேனியில் ஜனவரி 31 அன்று நடைபெற்ற நேதாஜி அவர்களின் புகைப்பட மேற்கோள் கண்காட்சி

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

புரட்சி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# மத்திய பட்ஜெட் 2017 மக்கள் நலனுக்கு எதிராக, முதலாளி வர்க்கத்தின் நலன் காக்க தயாரிக்கப்பட்டுள்ளது

*மத்திய பட்ஜெட் 2017 குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 01–02–17ல் விடுத்த அறிக்கை:*

தங்குதடையற்ற விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், பணிநீக்கம், வருமான வீழ்ச்சி, குறைந்தபட்ச சுகாதாரமும் கல்வி வசதியும் கிடைக்காமை, போதாக்குறைக்கு (500, 1000) நோட்டுக்களின் பண மதிப்பு நீக்கத்தால் ஏற்பட்ட துன்பங்கள் பன்மடங்கு அதிகரிப்பு என கடுமையான பொருளாதாரத் தாக்குதல்களால் நாட்டு மக்கள் ரத்தம் உறிஞ்சப்பட்டு வெளுத்துப் போயிருக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் போடப்பட்ட மத்திய பட்ஜெட் 2017 இந்தப் பிரச்சினைகள் எவற்றையும் உண்மையான அக்கறையுடன் விவாதிக்கவில்லை. மாறாக, வழக்கமான பொய்யான எதிர்ப்பார்ப்புகளும், பட்ஜெட் ஒதுக்கீடுகளும், வரி குறைப்பு என்ற பெயரில் வார்த்தை ஜாலங்களும், கார்ப்பொரேட் வரிகளை படிப்படியாக குறைக்கும் திட்டமும் தொடர்ந்து கொண்டிருப்பதும், அன்னிய நேரடி முதலீடுகளை தாராளமாக அனுமதிப்பதும், டிஜிட்டல் காலக் கட்டத்தின் துவக்கமும் என இவற்றைமட்டுமே சொல்வதுடன் பட்ஜெட்– தன்னைச் சுருக்கிக் கொண்டுவிட்டது. கூடவே, வறுமை ஒழிப்பு, விவசாயிகளின் வருவாய் உயர்வு மற்றும் பின்தங்கிய கடைத்தட்டு மக்களின் வாழ்க்கை மேம்பாடு பற்றிய வழக்கமான வெற்று வாக்குறுதிகளை வழங்கியது.

சீரிய மேலாண்மைக்காக அனைத்து வகை போக்குவரத்து சாதனங்களையும் ஒன்று சேர்க்கத்தான் இரயில்வே பட்ஜெட்டை பொது பட்ஜெட்டுடன் சேர்த்ததாக தர்க்கத்திற்கு ஒவ்வாத காரணத்தைச் சொல்லி இந்த மிக மோசமான, ஜனநாயக விரோத சேர்ப்பை நியாயப்படுத்த நிதி அமைச்சர் முயன்றார். இருப்பினும் தற்போதைய பட்ஜெட்டில் இரயில்வே துறையை மேன்மேலும் தனியார்மயப்படுத்தும் அடையாளங்கள் தெரிகின்றன. ‘போட்டி மற்றும் செலவு இவற்றுக்கேற்ப பயணக் கட்டணத்தை நிர்ணயிக்கிறோம்’ என்ற பெயரில் கட்டணத்தை உயர்த்தி பயணிகளின் சட்டைப் பையில் மேலும் கை வைக்கின்றனர். பயணிகளின் வசதிக்குறைவும் இரயில்களின் காலதாமதமும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், அதிகமான விபத்துக்களைச் சந்தித்து வரும் இப்பின்னணியில், இரயிலில் பாதுகாப்பாக பயணம் செய்ய முடியுமா என்ற கேள்வி எழுகிறது. அதேசமயம் இரயில்வே பாதுகாப்புத் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கும், பணியாற்றிக்கொண்டிருக்கும் ஊழியர்கள் கடமை தவறுகிறார்களா என கவனிக்கவேண்டிய மேற்பார்வையாளர் கடமை தவறும் போது அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் எந்த ஒரு சரியான கால வரையறைக்குட்பட்ட திட்டமும் பட்ஜெட்டில் இல்லை.

பெரிதும் பறைசாற்றப்பட்ட பண மதிப்புநீக்க கொள்கையால் எந்த அளவிற்கு கறுப்புப் பணம் முடக்கப்பட்டிருக்கிறது, ஊழல் தடுக்கப்பட்டிருக்கிறது, கள்ளப்பணம் அச்சடிப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது, கள்ளப்பணத்தால் தீவிரவாதிகள் பயன்பெறுவது முறியடிக்கப்பட்டிருக்கிறது என்பனவற்றை தெளிவுபடுத்த நிதி அமைச்சர் கவலைப்பட வில்லை. மாறாக, இந்த சாதனைகளுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்பதை மூடி மறைக்க, ‘பண மதிப்புநீக்கம் ஒரு துணிச்சலான தீர்மான கரமான செயல், நீண்டகால பயன்களை உருவாக்கும் சக்தி படைத்தது’ என்று மட்டும் கூறுகின்றார். விவசாயிகளின் தற்கொலைகளையும் விளை பொருட்களுக்கான உரிய விலை மறுக்கப் படுவதையும் சுயநலக் குழுக்களால் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அடிமாட்டு விலைக்கு விற்க நிர்ப்பந்திக்கப்படுவதையும் விவசாயிகள் ஓட்டாண்டியாகி விவசாயக் கூலித் தொழிலாளி களாக, புலம் பெயர்ந்த தொழிலாளர்களாக மாற்றப்படுவதையும் விவாதிப்பதைத் தவிர்த்து விட்டு விவசாயத்திற்கு அதிக ஒதுக்கீடு செய்திருக் கிறோம் எனக் கூறி சென்ற ஆண்டைப் போலவே இப்பொழுதும் ஊரக ஏழை மக்களை பொய் சொல்லி ஏமாற்றியிருக்கிறார்.

அதேபோன்று, நாட்டில் நடக்கும் பொருளாதார வளர்ச்சியை ‘வேலைவாய்ப்பை உருவாக்காத வளர்ச்சி’ என பொருளாதார சர்வே ஒப்புக் கொண்டிருக்கும் பின்னணியில் வேலை வாய்ப்பை உருவாக்க எந்த உரிய நடவடிக்கையையும் பட்ஜெட் குறிப்பிடவில்லை. ‘மெட்ரோ இரயில் துறையில் உள்நாட்டு ஹார்டுவேர் சாஃப்ட்வேர் வளர்ச்சிமயமாக்கல்’ என்ற புதிய வாய்ப்பு (அதாவது உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் எலெக்ட்ரானிக் தொழில்நுட்பத்தின் பயன்பாடு) மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உருவாக்கத் திட்டத்திற்கு (MNREGA) அதிக ஒதுக்கீடு மட்டுமே பட்ஜெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. இளைஞர்களை தொழில் முனைபவராக்குதல், தொழில் திறன் மேம்பாடு பெற்றவராக்குதல் என்றழைக்கப்படும் திட்டங்களைக் குறித்து விவரிப்பதில் அதி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சுரண்டப்படும் சாமானிய மக்களை இறுதிச் சொட்டு இரத்தத்தையும் பிழிந் தெடுக்குமளவிற்கு உழைப்பைச் சுரண்டி ஆலை அதிபர்களும் கார்ப்பொரேட் பகாசுரர்களும் கொழுத்த இலாபத்தை அபகரிப்பதையே நோக்கமாகக் கொண்டு இயங்கும் இன்றைய நெருக்கடி மிகுந்த ஏகபோகங்களால் கட்டுப் படுத்தப்படும் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் புதிதாக தொழில் முனைய முற்படும் இளைஞர் களால் எதுவும் செய்யமுடியாது என்பது ஏற்கெனவே நிதி அமைச்சகத்திற்கு நன்கு தெரிந்த ஒன்றாகும். உண்மையில் ஊரக வேலைவாய்ப்புத் (MNREGA) திட்டத்தின் கீழ் 100 நாள் வேலைக்குப் பதிலாக 35 நாட்களுக்கான நிதியைத்தான் சென்ற ஆண்டில் இவர்கள் ஒதுக்கியிருந்தார்கள். தொழில் முனை வோர்களின் துணிகர துவக்கங்கள் அதிகரிக்கும் என நினைத்தது விவரமறிந்தவர்களின் எதிர்ப் பார்ப்பின்படியே, மாபெரும் தோல்வியில் முடிந்திருக்கின்றது.

திட்டம் மற்றும் திட்டம்சாரா ஒதுக்கீடுகளை ஒன்றுசேர்த்ததன் மூலம் உருப்படியான முதலீட்டுத் திட்டம் குறித்து அரசாங்கத்திற்கு எந்த யோசனையும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, பொருளாதாரத்தை ராணுவ மயமாக்கும் போக்கின் ஒரு பகுதியாக, அடிப்படை தொழிற்சாலைகளுக்கு கொஞ்சமாவது செயற்கை யான தூண்டுதலை உருவாக்க, ராணுவ பட்ஜெட்டை சென்ற ஆண்டின் 2.58 இலட்சம் கோடி ரூபாயிலிருந்து தற்போது 2.74 இலட்சம் கோடியாக மத்திய அரசாங்கம் உயர்த்தியுள்ளது. இதில், பாதுகாப்பு வீரர்களுக்கான ஓய்வூதிய ஒதுக்கீடு சேர்க்கப்படவில்லை.

தூய்மை இந்தியா (சுவச் பாரத்) வரியின் மூலம் வசூலிக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் இருக்கிறது அல்லது எங்கோ திருப்பிவிடப் பட்டிருக்கிறது என மத்திய பொது தணிக்கை கணக்காயம் (CAG) சமீபத்தில் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், தூய்மை இந்தியாவைப் பற்றி வானளாவ புகழ்ந்து தள்ளிய நிதி அமைச்சர், அந்த நிதி எங்கே போனது என்பதைப் பற்றி பேசவேயில்லை. அதேபோல, பொதுமக்கள்மீது விதிக்கப்பட்ட விவசாய செஸ் வரி மூலம் வசூலிக்கப்பட்ட கூடுதல் நிதியும் என்ன ஆனது என சொல்லப்படவில்லை.

மூச்சுத்திணறிக்கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கத்தினரின் கோபத்தைத் தணிக்க, வருமான வரியில் சிறு சலுகை காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், சரக்கு மற்றும் சேவை வரி (GST) அறிமுகப்படுத்தப்படும்போது கடுமையாக உயரப்போகும் மறைமுக வரி மூலம் இந்த வருமான வரிச்சலுகையும் ஆற்று வெள்ளம் போல் அடித்துச் செல்லப்பட்டுவிடும். வருமான வரிச் சலுகையினால் ஏற்படும் ரூ20,000 கோடி இழப்பை, சாமானிய மக்கள்மீது விழும் சேவை வரி போன்ற மறைமுக வரியேற்றத்தின் மூலம் கிடைக்கும் ரூ60,000 கோடி வருவாயால் ஈடுகட்டப்படும்.

சுருங்கக் கூறின், கடன் மூலம் நடைபெறும் பொருளாதாரம் (Credit driven economy) என்பதற்குத்தான் முழு உத்வேகம் கொடுக்கப் பட்டுள்ளது. இதன் விளைவை, அமெரிக்காவில் தோன்றி உலகெங்கும் பரவிய ‘சப் பிரைம் நெருக்கடி’யில் மக்கள் ஏற்கெனவே பார்த்து விட்டார்கள். ஆனால், பெரிய கார்ப்பொரேட் மற்றும் தொழில் நிறுவனங்களால் கட்டப்படாமல் நிலுவையில் இருக்கும், தொடர்ந்து அதிகரித்து வரும் வங்கிகளின் வராக் கடன்களைப் பற்றி குறிப்புகள் எதுவும் பட்ஜெட்டில் இல்லை. இதேபோல், பட்ஜெட்டில் காட்டப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு எங்கிருந்து பணம் வரும் என்ற ஆதாரங்களும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வில்லை. ஒன்று, அரசாங்கம் கடன் வாங்குவதை (பட்ஜெட்டில் காட்டப்பட்ட அளவான 5.48 இலட்சம் கோடியையும் விட அதிகமாக) அதிகரிக்கும் அல்லது மேற்கொண்டு நோட்டுக்கள் அச்சடிப்பதை அதிகரிக்கும். பின்னது, பணவீக்கத்தை மேலும் அதிகரிக்கும்.

மொத்தத்தில் இந்த பட்ஜெட், ஆளும் முதலாளிகளின், அவர்களின் எடுபிடிகளின் நலன்களைக் காக்கவும் சாமானிய மக்களின் நலன்களுக்கு முற்றிலும் எதிராகவும் அடக்கப் பட்ட விவரங்களையும் மறைக்கப்பட்ட உண்மை களையும் கொண்டிருக்கும் பட்ஜெட் ஆகும். □

## மாபெரும் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா

7 நவம்பர், 2016 – 17 நவம்பர், 2017

**SUCI (COMMUNIST)**



சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**